Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37
கதிர் : 69
வியாழக்கிழமை
03 பெப்ரவரி 2022
தை 21 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053
பக்கங்கள்: 16
விலை: 30/=

ஊர்காவற்றுறையில்

## கர்ப்பிணி படுகொலை: சந்தேகநபர் கைது

*5 வருட விசாரணையில் திருப்பம்*

யாழ்ப்பாணம், பெப்.03
யாழ்ப்பாணம், ஊர்காவற் றுறைப் பகுதியில் 5 வரு 16

# உக்கிரமடைகிறது மீனவர் போர்!



யாழ்ப்பாணம், பெப்ரவரி 03

அத்துமீறும் இந்திய மீனவர்களைக் கட்டுப் படுத்துமாறும், வத்திராயன் பகுதியில் இருந்து கடலுக்குச் சென்ற மீனவர்கள் இருவரின் சாவுக்கு நீதி கோரியும், வடமராட்சிப் பகுதி மீன வர்களின் வீதிமறியல் – அகிம்சைப் போராட்டம் நேற்று மூன்றாவது நாளாகவும் உக்கிரத்தோடு முன்னெடுக்கப்பட்டது. 15

- மூன்றாம் நாளாகவும் நேற்றுப் போராட்டம்
- சமரச முயற்சிகள் தோல்வி
- இன்றும் வீதிமறிப்புத் தொடரும்

## மீனவர் பிரச்சினைக்கு தீர்வு இந்தியாவிடமே!

*தலையிடக் கோருகிறார் சம்பந்தன்*

## மீனவர்கள் மோதுவதை அரசு விரும்பவில்லை!

பஸில் தெரிவிப்பு

எழுத்துமூல உறுதிமொழி தரும்வரை

## போராட்டத்தை நிறுத்தோம்!

மீனவர்கள் சபதம்



## முற்றுகைப் போரில் முடங்கிய செயலகம்!

## ஆளுநர் அலுவலகமும், கச்சேரியும் மீனவர்களால் இன்று முற்றுகை!

(விரிவு 03 இல்....)



## ஈழத்தமிழர் விடயத்தில் தவறிழைக்கிறது ஐ.நா.!

*இலங்கை வதிவிடப்பிரதிநிதியிடம் மணிவண்ணன் எடுத்துரைப்பு*

யாழ்ப்பாணம் , பெப்.03

"இறுதிப்போர் நடைபெற்றபோது. ஐ.நா.சபை போரை நிறுத்தும், எமது மக்களைக் காப்பாற் றும்" என்று நாம் பெரும் நம்பிக்கை கொண்டி ருந்தோம். ஆனால் அவ்வாறு நடைபெற வில்லை. ஒரு லட்சத்து 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட் டும் காணாமல் ஆக்கப்பட்டு 15

## கரிநாள் போராட்டத்தை பேரெழுச்சியாக மாற்றுவோம்!

ஏற்பாட்டுக்குழு அழைப்பு

முல்லைத்தீவு, பெப்.03
நாளை இடம்பெறவுள்ள இலங்கையின் சுதந்திரதினத்தை, தமிழர் தேசத்தின் கரிநா 15



## மன்னாரில் கோத்தா!

மன்னார், பெப்.03
ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, மன்னார் 16

## அநுரவைக் கொல்லச் சதி!

கொழும்பு,பெப்.3
ஜே.வி.பியின் தலை வர் அநுரகுமார திஸா நாயக்கவை படு கொலை செய்வதற் கும், ஜே.வி.பியை அழிப்ப தற்கும் 15

## நாணய நிதியத்திடம் இலங்கை சரண்!

கொழும்பு, பெப். 3
சரிந்துபோயுள்ள இலங்கையின் பொரு ளாதாரத்தை மீட்டெடுக்க சர்வதேச நாணய நிதியத்திடம் உதவிகோரி கடிதம் எழுதியுள்ளோம். அதற்கமைய தொழில் நுட்ப உதவிகளை வழங்க சர்வதேச நாணய நிதிய 16

பெப்.7 முதல் ஏப் 7வரை–

## சகல பாடசாலைகளுக்கும் விடுமுறை!

கொழும்பு, பெப்.03
க.பொ.த. உயர்தரப் பரீட்சையை முன்னிட்டு நாட்டில் உள்ள சகல அரச மற்றும் அரச அனுமதி பெற்ற பாட 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னாரில் மணல் அகழ்வு உடனடியாக இடைநிறுத்தம்

## அபிவிருத்திக் கூட்டத்தில் தீர்மானம்

மன்னார், பெப். 3

**மன்னார் மாவட்டத்தில் கடந்த 5 வருடங்களுக்கு மேலாக, ஆய்வு என்ற ரீதியில் மேற்கொள்ளப்பட்டு வந்த கனிய மனல் அகழ்வு மற்றும் காற்றாலை மின்சக்தி திட்டத்தின் விரிவுபடுத்தலை உடனடியாக நிறுத்த மன்னார் பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.**



மன்னார் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

கூட்டத்தில் மன்னார் மாவட்டத்தில் கரையோரப் பகுதிகளில் 5 வருடங்களுக்கு மேலாக கனிய மணல் ஆய்வு என்ற போர்வையில், பேசாலை, நடுக்குடா, கட்டுக்காரன் குடியிருப்பு போன்ற பகுதிகளில் நிலத்தின் கீழ் 25 அடி ஆழத்துக்கு துளையிட்டு மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, வேறு நாடுகளுக்கு அனுப்பப்பட்டு வருகின்ற நிலையில், குறித்த ஆய்வு மற்றும் அகழ்வை உடனடியாக நிறுத்துவது தொடர்பில் ஆராயப்பட்டது.

அத்துடன் காற்றாலை மின் உற்பத்திச் செயற்றிட்டம் காரணமாக, மீன்பிடி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது என்று மக்கள் குற்றம் சுமத்திய நிலையில், காற்றாலைச் செயற்றிட்டத்தையும் நிறுத்துவதற்கு அபிவிருத்திக் குழுவால் ஆராயப்பட்டது. இதனையடுத்து இரு தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில் மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர் காதர் மஸ்தான், நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சார்ள்ஸ் நிர்மலநாதன், வினோ நோகராதலிங்கம், நகர, பிரதேச சபைகளின் தவிசாளர்கள், உறுப்பினர்கள், திணைக்களத் தலைவர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (ம-4-60-56-213)

## மூங்கிலாறு சிறுமி சாவு: ஐவருக்கு மறியல் நீடிப்பு



முல்லைத்தீவு மூங்கிலாறு கிராமத்தைச் சேர்ந்த 13 வயதுச் சிறுமியின் இறப்புத் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட ஐவரதும் விளக்கமறியல் எதிர்வரும் 15ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது

டிசெம்பர் மாதம் 15ஆம் திகதி மூங்கிலாறுப் பகுதியில் காணாமல்போன சிறுமி 18ஆம் திகதி சடலமாக மீட்கப்பட்டிருந்தார். சிறுமியின் கொலை தொடர்பில் தாய், தந்தை, சகோதரி, மைத்துனர், மைத்துனரின் தம்பி ஆகியோர் கைது செய்யப்பட்டு நேற்றுமுன்தினம்வரை மறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில் குறித்த வழக்கு முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றில் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு வந்தது.

இதன்போது சந்தேநபர்களின் மறியல் நீடிக்கப்பட்டு, வழக்கு தவணையிடப்பட்டது. குறித்த சிறுமி கடந்த மாதம், அவரது வீட்டிலிருந்து சுமார் 400 மீற்றர் தொலைவில் சடலமாக மீட்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-4-19)

## ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் திட்ட முன்மொழிவுகள் சமர்ப்பிப்பு

மன்னார், பெப். 3

மன்னார் நகர பிரதேசத்தின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், பிரதேச செயலக, கிராமரீதியான பல திட்ட முன்மொழிவுகளும் சமர்ப்பிக்கப்பட்டன.

பிரதேச செயலர் எம்.பிரதீப் நெறிப்படுத்தலில், மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர் காதர் மஸ்தான் தலைமையில் மன்னார் நகர மண்டப கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் கூட்டம் இடம்பெற்றது.

கூட்டத்தில் பிரதேச வாரியாக மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு விடயங்கள் பற்றியும் திணைக்களங்களின் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டன. கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், பிரதேசசபைத் தவிசாளர்கள், உறுப்பினர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்கள் கலந்து கொண்டனர். (ம-4-213)

## அபிவிருத்தி உத்தியோகத்தர் 122 பேருக்கு புதிய நியமனம்

கொழும்பு, பெப். 3

வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சார்ந்த, பின்தங்கிய பிரதேசங்களில் வாழும் மக்களின் வாழ்வாதாரத்தை அதிகரிக்கும் நோக்கில், புதிய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் 122 பேருக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

பட்டதாரிகளுக்கு நிரந்தர நியமனங்கள் பெற்றுக்கொடுக்கும் வேலைத்திட்டத்தின் கீழ், பின்தங்கிய கிராம பிரதேச அபிவிருத்தி வீட்டு விலங்கு வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதார பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சில் அவர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டது.

இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் மற்றும் அமைச்சின் செயலாளர் அமல் ஹரிச த சில்வா உள்ளிட்ட அமைச்சின் உயர்மட்ட அதிகாரிகள் நியமனத்தை வழங்கினர். (ம-4-20)

# சுற்றுச்சூழல் பாதுகாப்பும்கூட தேசியத்தின் மீதான பற்றே!

## பசுமை இயக்கம் வலியுறுத்து

கொழும்பு, பெப். 3

தேசியம் என்பது அரசியல்வாதிகளுக்கு மாத்திரமே உரித்தான ஒரு விடயமல்ல. அது மக்களுக்கானது. அது ஒரு இனத்தின் தனித்துவமான மொழி, உணவு, உடை, வாழிடம் என்று பலவற்றையும் உள்ளடக்கிய ஒரு வாழ்வியல் முறைமையாகும். இயற்கையோடு இசைந்து வாழ்வதும், சுற்றுச்சூழலின் மீது அக்கறை கொள்வதும் தேசியத்துக்கான பங்களிப்பாக அமையும்.

இவ்வாறு தமிழ்த்தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்தார்.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் 2021ஆம் ஆண்டுக்கான பசுமை அமைதி விருதுகள் விழாவில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

உலகம் இன்று எதிர்நோக்கியுள்ள பெரும் சவால்களாகக் கொரோனாப் பெருங்கொள்ளை நோயும், காலநிலை மாற்றமும் உள்ளன. இரண்டும் மனுக்குலத்துக்குப் பேரழிவுகளை ஏற்படுத்தி வருகின்றன. இரண்டும் இயற்கையை நாம் அழித்ததால் ஏற்பட்டுள்ள விளைவுகளே யாகும். இதனை, இயற்கையை நாம் அழித்ததால் இயற்கை எமக்கு வழங்கிய தண்டனைகளாகவே நாம் எடுத்துக் கொள்ளவேண்டும்.



பூமி வெப்பம் அடைவதால் துருவப் பகுதிகளில் உள்ள பனிமலைகள் உருகி வழிகின்றன. இதனால், இவற்றுக்கு கீழே உறங்கு நிலையிலுள்ள, மனிதன் தோன்ற முன்னரே தோற்றம் பெற்ற வைரஸ்கள் வெளிக்கிளம்பும் அபாயம் ஏற்பட்டுள்ளது. அவை பரவ ஆரம்பித்தால், அது கொரோனாவை விடப் பன்மடங்கு கொடிய நோய்களை ஏற்படுத்துவதாக அமையும்.

எனவே அனைவருமே இயற்கையுடன் ஒரு பசுமை அமைதி ஒப்பந்தத்தை உடனடியாகவே செய்ய வேண்டியவர்களாக உள்ளோம். இதில் மாணவர்களே பெரும் பங்காற்ற முடியும் -என்றார். (ம-4-இ)

## மணல் அகழ்வில் ஈடுபட்ட 5 வாகனங்கள் பறிமுதல்

கிளிநொச்சி, பெப். 3

சட்ட விரோதமாக மணல் அகழ்வில் ஈடுபட்ட 5 வாகனங்கள் பொலிஸாரால் நேற்றுப் பறிமுதல் செய்யப்பட்டன. அவற்றின் சாரதிகளும் கைது செய்யப்பட்டனர்.


முரசுமோட்டை ஊரியான் பகுதியில் 3 டிப்பர்களும், பிரமந்தனாறு மயில்வாகனபுரம் ஆற்றுப்பகுதியில் மணல் அகழ்வில் ஈடுபட்ட இரண்டு உழவு இயந்திரங்களுமே இவ்வாறு பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம்.சதுரங்க தெரிவித்தார். (ம-4-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீனவர் பிரச்சினைக்கு தீர்வு இந்தியாவிடமே!

## தலையிடக் கோருகிறார் சம்பந்தன்



கொழும்பு, பெப்.03

"இலங்கையில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்களைக் கட்டுப்படுத்தி, இருநாட்டு மீனவர்களுக்கும் இடையிலான முறுகலைத் தீர்க்கக் கூடிய ஒரேயொரு சக்தி இந்தியாவே. இந்திய அரசு தமது நாட்டு மீனவர்கள் வேறு இடங்களில் தொழில் செய்வதற்கான உரிய ஒழுங்குகளைச் செய்தால் இந்தப் பிரச்சினை முடிவுக்கு வரும்.

எனவே இந்தியா இந்தவிடயத்தில் தலையிட்டு, மீனவர்களின் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும்."

இவ்வாறு வலியுறுத்தினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன்.

இந்திய மீனவர்களின் அத்துமீறலைக் கண்டித்து யாழ்ப்பாண மாவட்ட மீனவர்கள் கடந்த 3 நாட்களாகத் தொடர் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். இது தொடர்பில் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனிடம் 'உதயன்' வினவியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

"நீண்டகாலமாக எமது மீனவர்கள் தொழில் செய்யக் கூடிய வசதிகள் இல்லாத காரணத்தின் நிமித்தம் இந்திய மீனவர்கள் இங்கு வந்து மீன்பிடித் தொழில் செய்து எமது மீனவர்களின் வாழ்வாதாரத்தைப் பாதிப்படையச் செய்துள்ளனர். இதைத் தடுத்து நிறுத்தக்கூடிய ஒரேயொரு சக்தி இந்திய அரசு மட்டுமே. இந்திய அரசு தமது நாட்டு மீனவர்கள் வேறு இடங்களில் தொழில் செய்வதற்கான உரிய ஒழுங்குகளைச் செய்தால் இந்தப் பிரச்சினை முடிவுக்கு வரும்.

எனவே இலங்கை அரசு, இந்திய அரசுடன் பேசி இவ்விடயம் தொடர்பில் அவர்களுக்கு மாற்று வழியைக் காட்டி, இந்திய மீனவர்கள் இங்கு வராமல் வேறு இடங்களில் தொழில் செய்யும் வகையில் இந்தக் கருமத்தைக் கையாளவேண்டும்.

அதேவேளை, எமது மீனவர்களும் இங்கு சுதந்திரமாகத் தொழில் செய்வதற்கான வசதிகளை இலங்கை அரசு ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும். எமது மீனவர்களுக்குத் தொழில் ரீதியான உதவிகளை வழங்கி அவர்களை ஊக்குவிக்க இலங்கை அரசும் முன்வர வேண்டும்.

இது தொடர்பில் இரு நாட்டு மீனவர் சங்கங்களும் பேசி ஓர் இணக்கப்பாட்டுக்கு வந்தால் அதை நிறைவேற்றுவதற்கான ஒழுங்குகளை இரு நாட்டு அரச தரப்பினரும் செய்வார்கள். எம்மால் இயன்ற உதவிகளை நாமும் செய்வோம்" -என்றார். (அ -22)

### எழுத்துமூல உறுதிமொழி தரும்வரை

# போராட்டத்தை நிறுத்தோம்!

மீனவர்கள் சபதம்



யாழ்ப்பாணம், பெப்.03

"இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி வரும் இந்தியப் படகுகளை நிரந்தரமாக தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படும் எனும் உறுதி மொழியை , தகுதி வாய்ந்த அதிகாரிகள் எழுத்து மூலம் தரும் வரை எமது போராட்டம் தொடரும்" என வடமராட்சி மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

பருத்தித்துறை சுப்பர்மடம் பகுதியில் போராட்டத்தை முன்னெடுத்துள்ள மீனவர்கள் ஊடக சந்திப்பொன்றை நேற்று நடத்தினர். அதன்போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

"இந்திய இழுவைப் படகுகளின் ஆக்கிரமிப்பினால் நமது கடல் வளம் அழிக்கப்படுவதுடன் சொத்துக்களும் நாசமாக்கப்பட்டு வந்தன. இந்த நிலையில் தற்போது உயிர்களைப் பறிக்குமளவுக்கு நிலைமை மோசமாகியிருக்கிறது.

எனவேதான் இந்த அராஜகத்துக்கு நிரந்தர முடிவு காணும் வகையில், பொன்னாலை தொடக்கம் பருத்தித்துறை வரை சாலை மறியல் போராட்டத்தையும் ,கடற்றொழில் மறிப்பு போராட்டத்தையும் நாம் முன்னெடுத்து வருகின்றோம். பாதிக்கப்பட்ட மீனவ சமுதாயமே ஒன்றிணைந்து இந்த மக்கள் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றது. எமது போராட்டத்துக்கும், சமாசம் மற்றும், மாவட்ட சம்மேளனத்துக்கு எந்தவித தொடர்பும் இல்லை.

மக்களால் முன்னெடுக்கப்பட்டுள்ள இந்தப் போராட்டமானது மீனவர்களுக்கு உரிய தீர்வு கிடைக்கும் வரை தொடரும். அதேவேளை போராட்டத்தை நடத்துவதற்கு பொதுமக்களிடம் ஆதரவு கோரி நிற்கின்றோம்.

குறிப்பாக, எமது போராட்டத்துக்கு வர்த்தகர் சங்கங்கள், போக்குவரத்து அமைப்புகள், பொது அமைப்புகள் என்பன தமது ஆதரவை வழங்க வேண்டுமென்று பகிரங்கமாக வேண்டுகோள் விடுக்கிறோம்" என்று மீனவர்கள் தெரிவித்துள்ளனர். (அ-26)

# மீனவர்கள் மோதுவதை அரசு விரும்பவில்லை!

## பஸில் தெரிவிப்பு

கொழும்பு, பெப்.03

"இலங்கை - இந்திய மீனவர்கள் கடலில் முட்டிமோதுவதை நாம் விரும்பவில்லை. இதற்கு உரிய தீர்வு காணப்பட வேண்டும் என்பதில் நாம் உறுதியாகவுள்ளோம்."

இவ்வாறு நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

இந்திய மீனவர்களின் அத்துமீறலைக் கண்டித்து யாழ்ப்பாணம் மாவட்ட மீனவர்கள் கடந்த 3 நாள்களாகத் தொடர்ச்சியாகப் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். இது தொடர்பில் பஸில் ராஜபக்சவிடம் 'உதயன்' வினவியபோதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"யாழ். மாவட்ட மீனவர்களின் ஜனநாயகப் போராட்டங்களை நாம் மதிக்கின்றோம். ஆனால், இந்தப் போராட்டங்கள் வன்முறை வழிக்குச் செல்லக் கூடாது.

இலங்கை இந்திய மீனவர்களின் பிரச்சினை நீண்டகாலமாகத் தொடர்கின்றது. மீனவர்கள் பலர் உயிரிழந்தும் தாக்கப்பட்டும் உள்ளனர். இது தொடரக் கூடாது. இதற்கு விரைந்து தீர்வு காணப்படவேண்டும்.

இது தொடர்பில் இந்திய அரசுடன் நாம் பேச்சுக்களை முன்னெடுத்துள்ளோம். இந்தப் பேச்சுக்களைத் தொடர்ந்து முன்னெடுப்போம்.

இரு நாட்டு மீனவர்களும் கடலில் முட்டிமோதுவதை நாம் விரும்பவில்லை. இதற்கு உரிய தீர்வு காணப்பட வேண்டும் என்பதில் நாம் உறுதியாகவுள்ளோம்" -என்றார். (அ-22)

# ஆளுநர் அலுவலகமும், கச்சேரியும் மீனவர்களால் இன்று முற்றுகை!

யாழ்ப்பாணம், பெப்.03

இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடியால், இலங்கை மீனவர்களுக்கு ஏற்படுகின்ற அநீதிகளுக்கு நீதி கோரி , யாழ். மாவட்டத்தின் அனைத்து கடற்றொழிலாளர் சங்கங்களும் இணைந்து, இன்று வியாழக்கிழமை காலை 7 மணியளவில் , யாழ். நகரிலுள்ள ஆளுநர் அலுவலகத்தையும், மாவட்டச் செயலகத்தையும் முற்றுகையிட்டு போராட்டம் நடத்த உள்ளதாக யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சம்மேளணங்களின் தலைவர் அன்னலிங்கம் அன்னராசா அறிவித்துள்ளார்.

"நாளை காலை யாழ்ப்பாண மாவட்டச் செயலகம், ஆளுநர் அலுவலகம் என்பவற்றுக்குள் எந்தவொரு பணியாளர்களையும் உட்செல்ல விடாது, பிரதான வாயில்களை முற்றுகையிட்டு எமக்கான தீர்வு கிடைக்கும் வரை தொடர்ச்சியாக போராட்டத்தை மேற்கொள்ள உள்ளோம். இந்தப் போராட்டத்தில் யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்து கடற்றொழிலாளர் சங்கங்களையும் இணைந்து கொள்ளுமாறு அறிவித்துள்ளோம்" என்றும் அவர் தெரிவித்தார். (அ-125)



# முற்றுகைப் போரில் முடங்கிய செயலகம்!

யாழ்ப்பாணம், பெப்.03

பருத்தித்துறை பிரதேச செயலகத்தை மீனவர்கள் முற்றுகையிட்டுப் போராடியதால், செயலகத்தின் நாளாந்தப் பணிகள் நேற்று முற்றாக முடக்கப்பட்டன.

அத்துமீறும் இந்திய மீனவர்களைக் கட்டுப்படுத்துமாறும், வத்திராயன் பகுதியில் இருந்து கடலுக்குச் சென்ற மீனவர்கள் இருவரின் சாவுக்கு நீதி கோரியும் , பருத்தித்துறை மீனவர்கள் மேற்கொண்டுவரும் தொடர் போராட்டம் நேற்றும் மூன்றாவது நாளாகத் தொடர்ந்தது. இந்தப் போராட்டத்தின் ஓர் அங்கமாக பருத்தித்துறை செயலகத்தை காலை 7 மணிக்கே சூழ்ந்து கொண்ட மீனவர்கள், செயலகத்தின் பிரதான வாசலை வழிமறித்து படகொன்றை வைத்ததுடன், போராட்டப் பதாகைகளையும் கட்டி, முற்றுகைப் போரில் இறங்கினர். இதனால் பிரதேச செயலர் உட்பட எந்தவொரு அலுவலரும் உள்நுழைய முடியாத நிலை ஏற்பட்டது. நீண்டநேரமாக மீனவர்கள் அலுவலர்களை உள்ளே நுழைய அனுமதிக்காத காரணத்தால், அதன் பின்னர் திரும்பிச் சென்றனர். இதனால் பருத்தித்துறை பிரதேச செயலகத்தின் சகல நடவடிக்கைகளும் நேற்று ஸ்தம்பிதமடைந்தன. (அ -26,20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பழைய மாணவர் சங்க கூட்டம்

சாவகச்சேரி, பெப். 3
வரணி கரம்பைக்குறிச்சி அ.த.க பாடசாலையின் பழைய மாணவர் சங்க மீள் உருவாக்கம் தொடர்பான கூட்டம், எதிர்வரும் 6ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (ம-ரி1-159)

## அறிவோர் ஒன்றுகூடல்

கொழும்பு, பெப். 3
கொழும்புத் தமிழ்ச்சங்கம் நடத்தும், 'தமிழ் இலக்கிய வரலாற்றில் கவிதை' என்ற தலைப்பில் அமைந்த அறிவோர் ஒன்றுகூடல் நிகழ்வானது, எதிர்வரும் 9ஆம் திகதி புதன்கிழமை மாலை 6 மணிக்கு கொழும்புத் தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.
ஓய்வுநிலை ஆசிரியர் கெங்காதரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், கொழும்பு றோயல் கல்லூரி மாணவன் தேவலோகேஸ்வரஷர்மா திவ்யஷரன், பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி மாணவர்களான சத்தியகுமாரன் அருணன், திருஞானசம்பந்தன் ஜீவேஸ் கௌதம் ஆகியோர் உரை நிகழ்த்தவுள்ளனர். (ம-ரி1)

## பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

சாவகச்சேரி, பெப். 3
எழுதுமட்டுவாழ் தெற்கு கமக்கார அமைப்பின் பொதுக் கூட்டம் அண்மையில் மீசாலை கமநல சேவைகள் நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் தலைமையில் இடம்பெற்றது.
இதில் அமைப்பின் செயலாளராக இ.தெய்வேந்திரம் பிள்ளை மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார். தலைவராக க.சிறிராமராவும் உபதலைவராக வீ.ஜீவராசாவும் உதவிச் செயலாளராக நா.வல்லிபுரமும், பொருளாளராக ம.யோகராசா உட்பட மேலும் ஆறு நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (ச-9)

# தொழில்நுட்ப வளர்ச்சியால் சிறுவர்களுக்குப் பாதிப்புகள்

### பெற்றோர் மீட்டெடுக்கவேண்டும் தவிசாளர் வாமதேவன் தெரிவிப்பு



**யாழ்ப்பாணம், பெப். 3**
**இன்றைய தொழில்நுட்ப வளர்ச்சி உள, சமூக மற்றும் பொருளாதார ரீதியாக பல்வேறு வகையான எதிர்மறைத் தாக்கங்களை சிறுவர்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது. இதிலிருந்து சிறுவர்களை மீட்கும் பொறுப்பு பெற்றோருக்கு உள்ளது.**

இவ்வாறு சாவகச்சேரி பிரதேச சபை தவிசாளர் க.வாமதேவன் தெரிவித்தார். கைதடி பொது நூலகத்தில் அண்மையில் இடம்பெற்ற பரிசில் வழங்கும் நிகழ்வில் அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில், ஒரு மனிதன் சமூகத்தில் நிமிர்ந்து நிற்கக்கூடிய மனிதனாக இருப்பதற்கு, வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும். சிறந்த கல்விமான்களை வாசிப்புப் பழக்கம் தான் உருவாக்கி இருக்கின்றது. ஆனால் இன்று தகவல் தொழில்நுட்பத்தால், வாசிப்புப் பழக்கம் அருகி வருகின்றது. பிள்ளைகளுக்குப் பெற்றோருடன் பேசுவதற்கு நேரம் இல்லை. இதனால் பெற்றோருக்கும், பிள்ளைகளுக்கும் இடையில் பெரும் இடைவெளி ஏற்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் கல்வியால் வீழ்ச்சியடைந்துள்ளது. யாழ்ப்பாணத்தில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்களே தலைமை அதிகாரிகளாக இருக்கின்ற ஒரு பரிதாபகரமான நிலைமையை நாங்கள் பார்க்கின்றோம். ஒரு காலத்தில் நிலாவைக் காட்டி சோறு ஊட்டிய பிள்ளைகளுக்கு. இப்போது இணையத்தைக் காட்டி சோறு ஊட்டுகின்ற காலம் வந்து விட்டது -என்றார். (ம-4-159)

## கௌரவிப்பு

சாவகச்சேரி, பெப். 3
வரணி மத்திய கல்லூரியில் 2022ஆம் ஆண்டு பல்கலைக்கழகத்துக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு, இன்று பிற்பகல் ஒரு மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.
கல்லூரி அதிபர் ப.செல்வவிநாயகம் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில், தாபன மற்றும் பொதுநிர்வாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் அபிராமி இராசதுரை, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ் மாவட்ட அமைப்பாளர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன், இந்து பௌத்த கலாசார பேரவையின் பொதுச் செயலாளர் எம்.ரி.எஸ்.இராமச்சந்திரன், கணித பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.மதிதரன், பழைய மாணவர் சங்க போஷகர் சி.துரைராசா, முன்னாள் அதிபர் க.மங்களேஸ்வரன், தனங்களப்பு அ.த.க பாடசாலை அதிபர் க.உமாபாலன், பாடசாலை அபிவிருத்திக்குழு செயலாளர் வ.ஜீவகரன் ஆகியோர் கலந்துகொண்டு வாழ்த்துரைகளை வழங்கவுள்ளனர். (ம-ரி1-159)

## விளையாட்டு வீரர்களால் இனத்துக்கே அங்கீகாரம்

யாழ்ப்பாணம், பெப். 3
நாம் இன ரீதியாக வளர்ச்சியடைய விளையாட்டுக்கள் கைகொடுக்கும். திறமையுடைய வீரர்களால் இனத்துக்கே அங்கீகாரம் கிடைக்கும் என்று உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கத்தின் தலைவர் ப.தர்மகுமாரன் தெரிவித்தார்.
உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக் கழக, சிறுவர்களுக்கான உதைபந்தாட்ட அக்கடமியின் திறப்பு விழாவில் அவர் மேலும் தெரிவிக்கையில்,
விளையாட்டுக்கள் பொழுது போக்குக்கு மட்டுமானவையல்ல. தொற்றா நோய்களில் இருந்து விடுபடுவதற்கும், தொழில் முறைமைகளுக்கும் கைகொடுக்கும். எனவே விளையாட்டு வீரர்களின் திறமைகள் பிரகாசமாக இலங்கையில் மிளிர எமது பயிற்றுநர்களுக்கு அங்கீகாரம் முக்கியமானது. அதற்கான ஏற்பாடுகளை இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனம் நிறைவு செய்து தரவேண்டும் -என்றார். (ம-4-50)

மேலதிக சுகாதார மருத்துவ அதிகாரியாக

## உளநல மருத்துவர் சிவரூபன் நியமனம்

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தில், உளநல மருத்துவராகக் கடமையாற்றிய மருத்துவர் சிவரூபன், மேலதிக சுகாதார மருத்துவ அதிகாரியாக சுகாதார திணைக்களத்தால் நியமிக்கப்பட்டு கடமைகளைப் பொறுப்பேற்றார்.
இதற்கமைய பிரதேசத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள், மற்றும் பாடசாலைகளில் சிறுவர்களுக்கு காணப்படும் உளநலம் தொடர்பான பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றுக்கான தீர்வுகளைப் பெறும் வகையிலான வேலைத்திட்டங்களை மருத்துவர் மேற்கொள்ளவுள்ளார். (ம-ரி1-9)



## கிராமியத் திட்டங்களுக்கு பயனாளிகள் தெரிவு

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட கிராம அபிவிருத்தித் திட்டங்களுக்கான, பயனாளிகள் தெரிவு பிரதேச செயலகத்தில் நேற்று நடைபெற்றது.
பிரதேச செயலாளர் பிரேமினி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் கலந்துகொண்டார்.
அங்கு உரையாற்றிய அவர், வரவு- செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட மிகப் பெரிய நிதியாகிய 85ஆயிரம் மில்லியன் ரூபா நிதியில், இந்த வேலைத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும்.
கிராமிய மட்டங்களில் உள்ள குறைபாடுகள், மக்களின் வாழ்வாதாரம், உள்ளூர் உற்பத்திகள் அதிகரிப்பு போன்ற திட்டங்கள் முன்னெடுக்கப்படும். யாழ். மாவட்டத்தில் 435 கிராம அலுவலர் பிரிவுகளிலும் 2ஆயிரத்துக்கும் மேற்பட்ட வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்படும் -என்றார். நிகழ்வில் பயனாளிகளுக்கு கடிதம் வழங்கப்பட்டது. (ம-4-319)



## திறன் வகுப்பறை திறப்பு விழா

இயக்கச்சி அ.த.க. பாடசாலையில் திறன் வகுப்பறைத் திறப்பு விழா, அண்மையில் நடைபெற்றது.
ரட்ணம் அறக்கட்டளை மற்றும் பாடசாலையின் புலம்பெயர் பழைய மாணவர்களின் நிதிப்பங்களிப்பில், திறன் வகுப்பறை அமைத்துக் கொடுக்கப்பட்டது. இதன்போது சிறப்பு விருந்தினர்களான கயிலாயபிள்ளை மகேந்திரராசா, சிவாஜினி மகேந்திரராசா இணைந்து திறன்வகுப்பறையின் பெயர்ப்பலகையை திரைநீக்கம் செய்துவைக்க பிரதம விருந்தினர் தி.திலீபன் நாடாவை வெட்டி வகுப்பறையை சம்பிரதாய பூர்வமாக திறந்து வைத்தார்.
பாடசாலை முதல்வர் இராசேஸ்வரி விஜயநாதனின் தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன. பெற்றோர், பழைய மாணவர்கள் எனப் பலரும் நிகழ்வில் கலந்துகொண்டனர். (ம-ரி1-11)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கல்முனையில்

# பிரதேச செயலகத்தை முற்றுகையிட்டு போர்

**அம்பாறை, பெப். 3**

**இஸ்லாமாபாத் வீட்டுத்திட்டத்திலிருந்து வெளியேறும் கழிவுநீர்ப்பிரச்சினைக்குத் தீர்வு வழங்கக்கோரி, கல்முனை விகாராதிபதி ரண்முத்துக்கல சங்கரத்ன தேரர் தலைமையிலான பொதுமக்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.**



கல்முனை சுபத்திராம விகாரைக்கு முன்னால் ஒன்று கூடிய மக்கள், அங்கிருந்து பேரணியாக கல்முனை பிரதேச செயலகத்தைச் சென்றடைந்தனர். இதனையடுத்து கல்முனை பிரதேச செயலகம், கல்முனை மாநகர சுகாதாரப்பிரிவு, நகர அபிவிருத்தி அதிகார சபை அமைந்துள்ள கட்டடத்தொகுதியின் பிரதான கதவை மூடி, வழிமறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

'கழிவு நீரை வைத்து அரசியல் செய்யாதீர்', 'மக்களின் சுகாதாரப் பிரச்சினைக்குத் தீர்வு வேண்டும்', 'முறையான கழிவகற்றல் செய்யப்படவேண்டும்', 'மாநகர சபை மௌனம் காப்பது ஏன்?' போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தி அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அதிகாரிகள், ஆர்ப்பாட்டக்காரர்களுடன் சுமுகமான பேச்சில் ஈடுபட்டனர். எனினும் ஆர்ப்பாட்டக்காரர்கள் அவர்களது வாக்குறுதிகளை ஏற்றுக்கொள்ளவில்லை. தமிழர் பிரச்சினைக்கு உடனடியாக தீர்வு வழங்க வேண்டும் என்று கோரி ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர். (ம-4-இ)

## இரவு விடுதி நடத்திய வெளிநாட்டவர் கைது

கொழும்பு, பெப். 3

கொள்ளுப்பிட்டியில் சட்டவிரோதமான முறையில் இரவு விடுதியொன்றை நடத்திய குற்றச்சாட்டில், 12 வெளிநாட்டவர்கள் அடங்கலாக 14 பேர் அதிரடியாகக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

விடுதியில் 489 மதுபானப் போத்தல்கள் கைப்பற்றப்பட்டன. இந்த இரவு விடுதியை, வெளிநாட்டுப் பெண்ணொருவர் நடத்தியமை விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. (ம-4-இ)

## நாமல் மீதான வழக்கு மார்ச் 10இல் விசாரணை

கொழும்பு, பெப். 3

விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ச உள்ளிட்ட ஐவருக்கு எதிரான பணச்சலவை வழக்கு, எதிர்வரும் மார்ச் மாதம் 10ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று கொழும்பு மேல் நீதிமன்று அறிவித்தது.

வழக்கு மேல் நீதிமன்ற நீதிபதி நவரத்ன மாரசிங்க முன்னிலையில் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது வழக்கின் இரண்டாவது மற்றும் ஆறாவது குற்றவாளிகள் முன்னிலையாகாத நிலையில், விசாரணையைத் தொடர மேல்நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

2013 மற்றும் 2014ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில், நாமல் ராஜபக்சவுக்குச் சொந்தமான கோவர்ஸ் கோர்ப்பரேட் சேர்விசஸ் (பிரைவேட்) லிமிட்டெட் மூலம் ரூ.30 மில்லியன் பணத்தை மோசடி செய்தனர் என்று சட்டமா அதிபரால் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

நாமல் ராஜபக்ச, இந்திக கருணாஜீவ, சுஜானி போகொல்லாகம, இரேஷா சில்வா, நித்ய சேனானி சமரநாயக்க ஆகியோர் மற்றும் கோவர்ஸ் கார்ப்பரேட் சர்வீசஸ் (பிரைவேட்) லிமிட் ஆகிய நிறுவனங்களுக்கு எதிராக பணச்சலவை தடுப்புச் சட்டத்தின் கீழ், 11 குற்றச்சாட்டுக்களின் கீழ் சட்டமா அதிபரால் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(ம-4-இ)

## ஊடகவியலாளரை தாக்கியவர் கைது

சாவகச்சேரி,பெப்.3

ஊடகவியலாளரை தாக்கிக் காயப்படுத்தி, உயிர் அச்சுறுத்தல் விடுத்தார் என்ற குற்றச்சாட்டில், சந்தேகநபர் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த திங்கட்கிழமை மதியம் கடமை முடித்து, சாவகச்சேரி - கச்சாய் வீதியால் வீடு திரும்பிய ஊடகவியலாளரை, வானில் வந்தவர்கள் மோத முற்பட்டதுடன், அவரைத் தாக்கி காயப்படுத்தினர்.

சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. இதனையடுத்து சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-4-159)

# மீளமைக்கப்பட்டது

## 'யாழ்கோ' நிர்வாகசபை!

### பொதுச்சபையின் கோரிக்கைக்கு ஆணையாளர் உடனடித் தீர்வு

யாழ்ப்பாணம், பெப். 3

யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் ('யாழ்கோ') பொதுச்சபையினரின் கோரிக்கைக்கு அமைவாக, உடன் நடைமுறைக்கு வரும்வகையில், துறைசார் நிபுணர் களை உள்ளடக்கி சங்க நிர்வாகக்குழு வடமாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரால் மீளமைக்கப்பட்டு ள்ளது.

'யாழ்கோ' நிறுவனத்தின் செயற்பாடுகள் குறித்து பொதுச் சபையினருடனான கலந்துரையாடல் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இந்தக் கலந்துரையாடலில், வடமாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மு.நந்தகோபாலன் உள்ளிட்ட கூட்டுறவுத்திணைக்கள உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

இதன்போது, 'யாழ்கோ நிறுவனச் செயற்பாடுகள் அண்மைக் காலமாக திருப்தியற்ற நிலையில் உள்ளன. பால்மாவுக்குத் தட்டுப்பாடு நிலவும் இந்தச் சூழலில் யாழ்கோ தனது நடவடிக்கைகளை விரிவுபடுத்தும் சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது. ஆனால் அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, உரிய அபிவிருத்தியை முன்னெடுக்க நிர்வாகம் தவறியுள்ளது. எனவே இப்போதுள்ள நிர்வாகச்சபையை கலைத்து ஆளுமை மிக்க புதிய நிர்வாக சபையை அமைத்துத் தரவேண்டும்' என்று பொதுச்சபையினர் கூட்டுறவு ஆணையாளரிடம் கோரிக்கை விடுத்தனர். இதனையடுத்து உடனடியாகவே துறைசார் நிபுணர்களை உள்ளடக்கும் வகையில் யாழ்கோ நிர்வாகசபை மீளமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

இதனடிப்படையில், யாழ்கோ நிர்வாக சபையின் தலைவராக வடமாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் ஓய்வுநிலைப் பணிப்பாளரான கால்நடை மருத்துவர் சி.கே.சிவபாலசிங்கமும், உப தலைவராக, குருநகர் உயர் தொழில்நுட்ப நிறுவன விரிவுரையாளர் திருமதி இ.துஷ்யந்தினியும், நிர்வாகசபை உறுப்பினர்களாக யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ பீட சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சி.சிவேசன், வடமாகாண கால நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களப் பிரதிப்பணிப்பாளர் கிறிஸ்ரீன் புஷ்பலேகா மரியதாசன், ஓய்வுநிலை அதிபர் திருமதி இ. கமலராணி ஆகியோரும் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரால் உடன் நடைமுறைக்கு வரும்வகையில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்கோ நிறுவனத்தை அபிவிருத்தி செய்யும் வகையில் நிர்வாக சபையைப் புனரமைத்த கூட்டுறவு ஆணையாளருக்கு பொதுமக்கள் பாராட்டுத் தெரிவித்துள்ளனர். (ம)



## மகாஜனக் கல்லூரியின் நுழைவாயில் திறப்புவிழா

யாழ்ப்பாணம், பெப். 3

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் இரு நுழைவாயில்களின் திறப்பு விழா நேற்று நடைபெற்றது. இதற்கான நிதியுதவியை 1979ஆம், 1998ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரண தர பழைய மாணவர்களும் 1982ஆம், 2001 ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தர பழைய மாணவர்களும் வழங்கினர்.

கல்லூரியின் அதிபர் மங்களம் மணிசேகரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ம-ரி:27)

## தனுஷ்கோடியில் இலங்கைப் படகு

கொழும்பு, பெப். 3

தனுஷ்கோடி அருகே இரண்டாம் மணல் திட்டில், மர்மமான முறையில் இலங்கைப் படகொன்று கடந்த திங்கட்கிழமை கரையொதுங்கியுள்ளது. இது தொடர்பில் உளவுத்துறை, கடலோர காவற்படையினர் உள்ளிட்ட பாதுகாப்புப் படையினர் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

நாட்டுப்படகு மீனவர்கள் வழங்கிய தகவலை அடுத்து, மெரைன் பொலிஸார், உளவுத்துறை மற்றும் சுங்கத் துறையினருடன் இணைந்து படகை மீட்டு, இந்தியக் கரைக்குக் கொண்டு சென்றனர். மீட்கப்பட்ட பைபர் படகு, புத்தளம் பகுதியைச் சேர்ந்த 22 அடி நீளமும் 3 அடி அகலமும் கொண்ட வெள்ளை மற்றும் சிவப்பு நிறங்களான படகு என்று அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. (ம-4-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸார் தவறிழைத்தால் நேரடியாக முறையிடலாம்!

## பிரதிப் பொலிஸ்மா அதிபர் வேண்டுகோள்



யாழ்ப்பாணம், பெப். 3

யாழ்.மாவட்டத்தில் உள்ள பொலிஸ் நிலையங்கள் தொடர்பில் பொதுமக்கள் ஏதேனும் முறைப்பாடுகளை ஊடகவியலாளர்களுக்கு தெரியப்படுத்தினால், அது தொடர்பில் ஊடகவியலாளர்கள் நேரடியாக எனது கவனத்துக்கு கொண்டு வரமுடியும் என்று யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரியந்த லியனகே தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.


யாழ். மாவட்டத்தில் உள்ள சில பொலிஸ் நிலையங்களில் பொதுமக்கள் முறைப்பாடு செய்ய முற்படும்போது, அது முறைப்பாட்டுப் புத்தகத்தில் பதிவு செய்யப்படாமல், சாதாரண புத்தகம் ஒன்றில் பதிவு செய்யப்படுகின்றது.

முறைப்பாடு பதிவு செய்யும்போது முறைப்பாட்டாளர் கூறிய விடயங்களுக்கு மேலதிகமாக சில விடயங்களும் முறைப்பாட்டுப் புத்தகத்தில் சேர்ப்பது தொடர்பில் ஊடகவியலாளர்கள் அவருக்குத் தெரியப்படுத்தினர். அதற்கு பதிலளித்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்த தாவது:

முறைப்பாட்டாளர் தான் வழங்கிய விடயங்கள் அனைத்தும் முறைப்பாட்டுப் புத்தகத்தில் இருக்கின்றதா என்பதைச் சரியாக வாசித்த பின்னரே கையெழுத்திடவேண்டும். அவ்வாறு முறைப்பாட்டுப் புத்தகத்தில் இடம்பெறவில்லையெனில், அதில் கையெழுத்திடவேண்டிய தேவையில்லை.

அது தொடர்பில் குறித்த பொலிஸ் நிலையத்தில் அல்லது மேலதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டு வரமுடியும்.

பொலிஸார் முறைப்பாடுகளை ஏற்கும்போது, முறைப்பாட்டுக்கென வழங்கப்பட்ட புத்தகத்திலேயே எழுத வேண்டும். பொதுமக்களுக்குச் சேவையாற்றும் நோக்கிலேயே பொலிஸார் தமது கடமைகளை மேற்கொள்கின்ற நிலையில் சிலர் தவறிழைக்கின்றனர். அவ்வாறு பொலிஸார் தவறுகள்விடும் சந்தர்ப்பங்களை, ஊடகவியலாளர்கள் என்னிடம் நேரடியாகவோ அல்லது வட்ஸ்அப் இலக்கத்தின் ஊடாகவோ தெரிவிக்கமுடியும் - என்றார். (ம-4,20)



# கஞ்சா பொதிகளுடன் சகோதரர்கள் கைது

யாழ்ப்பாணம், பெப். 3

200 கிராம் கஞ்சாவுடன் 23 மற்றும் 36 வயதுடைய சகோதரர்கள் இருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில், இராணுவப் புலனாய்வுப் பிரிவினரும், தெல்லிப்பழை பொலிஸாரும் இணைந்து, புன்னாலைக்கட்டுவன் காளியாவத்தையில் மேற்கொண்ட சோதனையில் இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர்கள் கஞ்சாவை சிறுசிறு பொதிகளாகக் கட்டியும், வேறொரு பையில் உதிரியாகவும் வைத்திருந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ம-4,27)

# நடன நிகழ்வு பிற்போடல்

யாழ்ப்பாணம், பெப். 3

யாழ் இந்திய துணைத்தூதரகத்தின் ஏற்பாட்டில், யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இன்று மாலை 6.30 மணி முதல் இரவு 8.30 மணி வரை நடைபெறவிருந்த இந்திய கலைஞர்களின் ஒடிசி நடன நிகழ்வு தவிர்க்க முடியாத காரணத்தால் இடம் பெறாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-ரி)

# கண்ணிவெடி மீட்பு

சாவகச்சேரி, பெப். 3

சாவகச்சேரி தனங்களப்பு பகுதியிலுள்ள தனியார் காணியொன்றிலிருந்து கண்ணிவெடி மீட்கப்பட்டுள்ளது என சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்தனர்.

காணி உரிமையாளர் வழங்கிய தகவலுக்கு அமைய இந்த கண்ணிவெடி கடந்த திங்கட்கிழமை மீட்கப்பட்டது. (வ-23)

# ஒரு இலட்சம் வேலைத்திட்டங்கள்: முன்னாயத்தக் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், பெப். 3

நாடளாவிய ரீதியில் இன்று ஆரம்பமாகவுள்ள ஒரு லட்சம் வேலைத்திட்டங்கள் தொடர்பான, முன்னாயத்த கலந்துரையாடல், யாழ். பிரதேச செயலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இதில் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவிக்கையில், போர் முடிந்து 15 வருடங்கள் கடந்தும் வடமாகாணம் மிகவும் பாதிக்கப்பட்ட ஒரு மாகாணமாகவே உள்ளது. குறிப்பாக யாழ்ப்பாணம் மாவட்டம் வறுமையில் எட்டாவது மாவட்டமாகக் காணப்படுகின்றது.

அதனால் ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிலும் ஒவ்வொரு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம். ஆனால் இங்கு ஒரு சிலர் 13 வேண்டாம் என்று கோஷம் எழுப்புகின்றனர். ஒரு சிலர் 13 வேண்டுமென்று கடிதம் எழுதுகின்றனர்.

மக்களுடைய பிரச்சினை அதிகமாக உள்ளது. அதனைத் தீர்ப்பதற்கு முடியாதவர்களாக இவர்கள் உள்ளனர் - என்றார். (ம-4,23)

# கிராமிய வேலைத்திட்டம் இன்று அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், பெப். 3

யாழ்.மாவட்டத்தில் உள்ள அனைத்து கிராம அலுவலர் பிரிவுகளிலும் இன்று ஒரே நேரத்தில் 3 மில்லியன் ரூபா செலவிலான கிராமிய வேலைத் திட்டங்கள் அங்குரார்ப்பணம் செய்யப்படும்.

கடந்த வரவு- செலவுத் திட்டத்துக்கு அமைவாக, பொதுமக்கள் மற்றும் அமைப்புக்களால் முன்வைக்கப்பட்ட வேலைத்திட்டங்கள் முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளன. அதனடிப்படையில் மூன்று கட்டங்களாக பிரிக்கப்பட்டு, முதல் கட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட வேலைகள் இன்று ஆரம்பிக்கப்படும். ம-4,9)

# முச்சக்கர வண்டியின் சாரதி மீது தாக்குதல்

யாழ்ப்பாணம், பெப். 3

காங்கேசன்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கீரிமலைப் பகுதியில், முச்சக்கர வண்டிச் சாரதி ஒருவர்மீது நேற்றுமுன்தினம் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

சண்டிலிப்பாய் தரிப்பிடத்தில், முச்சக்கர வண்டியில் ஏறிய நபர் ஒருவர், கீரிமலை, கருகம்பனைப்பகுதியில், இன்னும் இரண்டு பேரை ஏற்ற வேண்டும் என்று தெரிவித்து ஒழுங்கை ஒன்றுக்குள் முச்சக்கர வண்டியைச் செலுத்துமாறு பணித்துள்ளார். அதனால் சாரதியும் முச்சக்கர வண்டியை குறித்த ஒழுங்கைக்குள் செலுத்தியுள்ளார்.

இதன்போது சாரதியை முகம் மறைத்து சரமாரியாகத் தாக்கியுள்ளனர். சம்பவத்தில் படுகாயமடைந்த முச்சக்கர வண்டிச் சாரதி, தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார், முச்சக்கர வண்டியை மீட்டனர். தாக்குதல்தாரிகளைக் கைது செய்வதற்கான மேலதிக நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ம-4,125)

# பட்டா மோதியதில் சிறுமி படுகாயம்

யாழ்ப்பாணம், பெப். 3

பட்டா ரக வாகனம் மோதியதில் 4 வயதுச் சிறுமி ஒருவர் படுகாயமடைந்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட செட்டியார் மடம் துணைவிப் பகுதியில் நேற்றுமுன்தினம் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்து தொடர்பில் குடும்பத்தவரால் எவ்வித முறைப்பாடும் மேற்கொள்ளப்படாத நிலையில் மருத்துவமனையிலிருந்து விபத்து தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து இது தொடர்பாக சிறுமியின் தாயாரிடம் வாக்குமூலத்தைப் பெற்று விபத்தை ஏற்படுத்திய சாரதியைக் கைது செய்வதற்கு வட்டுக்கோட்டை பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (வ-125-27)



# வாக்காளர் தின பேச்சுப் போட்டி முடிவுகள்

கிளிநொச்சி மாவட்ட தேர்தல் அலுவலகத்தால் வாக்காளர் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட மாவட்ட மட்ட பேச்சுப் போட்டி கிளிநொச்சி மாவட்ட தேர்தல் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதில் கிளிநொச்சி மகா வித்தியாலய மாணவி செல்வானந்தன் வத்சலா முதலாவது இடத்தையும், கிளி.இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலை மாணவி சண்முகராசா பாமகள் இரண்டாம் இடத்தையும் கிளிநொச்சி மகா வித்தியாலய மாணவி சுதர்சன் யானுசா மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டனர். (வ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## சாது மிரண்டால் கடலும் தாங்காது!

முன்னெப்போதும் இல்லாதளவுக்கு வடக்கு மீனவர்களின் போராட்டம் இப்போது அதி உக்கிரத்தோடு வெளிப்பட்டு நிற்கின்றது. சாதுமிரண்டால் காடு தாங்காது என்பார்கள். அதுபோலவே தான், மீனவர்களும் இதுநாள் வரை பொறுத்துப் பொறுத்துப் பார்த்துவிட்டு, சுனாமி போல பொங்கியெழுந்திருக்கிறார்கள். அவர்கள் போராட்டம் செய்வதற்கான காரணத்தில் துளிகூட பிழையில்லை. அவர்களின் பூர்வீகக் கடலில், எங்கிருந்தோ வந்தவர்கள் சுதந்திரமாகத் தொழில் செய்கிறார்கள். ஆனால், அந்தக் கடலின் மைந்தர்கள் மட்டும் பயந்து பயந்து, உயிரைக் கையில் பிடித்தபடி, 'நித்திய கண்டம், பூரண ஆயுசு' என்கிற மாதிரித்தான் கடலுக்குப் போய்வர வேண்டியிருக்கிறது.

ஒருபுறம் கடற்படையின் கெடுபிடிகள், பழிவாங்கல்கள், இன்னொருபுறம் தென்னிலங்கை மீனவர்களின் அத்து மீறல். இவையெல்லாவற்றையும்விட பிரதான பிரச்சினை, தமிழக மீனவர்களின் அத்துமீறிய வருகையும், சட்ட விரோத மீன்பிடிப்பும். இப்படி மூன்று பக்க நெருக்குதல்களையும் தாண்டியே, வடக்கு மீனவர்கள் கடலுக்குப் போய், தங்கள் வாழ்வாதாரத்தைக் காக்கவேண்டும்.

'அத்துமீறிய மீன்பிடியைக் கட்டுப்படுத்துங்கள்' என இது வரை எண்ணற்ற தடவைகள் கவனவீர்ப்பு நடவடிக்கைகளில் மீனவர்கள் ஈடுபட்டுவிட்டார்கள். ஆயிரக்கணக்கான மனுக்கள் இலங்கை – இந்திய அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டுவிட்டன. சில தடவைகள் அத்துமீறிய தமிழக மீனவர்களை, ஈழ மீனவர்கள் மடக்கிப் பிடித்து கடற்படையினரிடமும் கையளித்து, 'இப்படி நீங்கள் பிடிக்கலாமே' என்று அத்துமீறலைத் தடுப்பதற்கான வழியையும் எம் மீனவர்கள் காட்டியிருந்தார்கள். ஆனால் அத்தனை எத்தனங்களும் எந்தவொரு பயனையும் தரவில்லை. எப்போதும்போல அத்துமீறிய மீன்பிடி தங்கு தடையின்றித் தொடரவே செய்கின்றது.


முன்னரெல்லாம், வெறுமனே மீனை மட்டும் பிடித்துக்கொண்டுபோன அத்துமீறல்கார மீனவர்கள், இப்போது உயிர்ப்பலியெடுக்கவும் முனைகிறார்கள். வடமராட்சி கிழக்கில் இருந்து தொழிலுக்குப்போன இரு மீனவர்களின் படகு சிதைக்கப்பட்டு, வலைகள் அறுக்கப்பட்டு, அவர்கள் சடலங்களாக மீட்கப்பட்ட பின்னணியில் இந்திய மீனவர்களே இருப்பதாக வடமராட்சி மீனவர்கள் உறுதியாக நம்புகிறார்கள். (இதேபோன்ற இன்னொரு சம்பவம் சில வாரங்களுக்கு முன்னர் மாதகல் கடற்பரப்பிலும் நிகழ்ந்திருந்தது. ஆனால் கடற்படைப் படகு மோதியதாலே, மாதகல் மீனவர் உயிரிழந்திருக்கலாம் என்று அப்போது சொல்லப்பட்டது)

இதைத்தவிர, இன்னொரு சம்பவமும் அத்துமீறும் மீனவர்களின் வன்முறை முகத்தைக் காட்டியிருக்கிறது. வடமராட்சி கிழக்கு மீனவர்கள் சடலமாக மீட்கப்பட்ட பின்னர், பருத்தித்துறையில் மீனவர்கள் போராட்டத்தில் குதித்திருந்தனர். அந்தச் சமயத்தில் இந்திய மீன்பிடி இழுவைப்படகுகள் வடமராட்சிக் கடற்பரப்பில் அத்துமீறி, உள்நுழைந்ததை அறிந்த மீனவர்கள் அந்தப் படகை முற்றுகையிட்டனர். ஆனால் அந்த இழுவைப்படகில் இருந்த தமிழக மீனவர்கள் பெற்றோல் குண்டை வீசியெறிந்தும், கற்களால் எறிந்தும் தாக்குதலை நடத்தியிருக்கிறார்கள். ஆக, தங்கள் சட்டவிரோத நடவடிக்கைக்கு தடை போடுபவர்களைக் கொலை செய்வதற்கான முன்னேற்பாட்டுடனேயே தமிழக மீனவர்கள் வருகிறார்கள் என்பது புலனாகின்றது. தங்கள் வயிற்றுப்பசிக்காக வருபவர்களிடம் வேண்டுமானால் இரக்கம் காட்டலாம், ஆனால் எங்களின் கடலில் களவாக மீன்பிடிப்பதோடு மட்டுமல்லாது, அந்தக் கடலின் மைந்தர்களையே மாய்க்க நினைப்பவர்களை எப்படி மன்னிக்கமுடியும்? அதனால்தான் யாழ். குடாநாட்டு மீனவர்கள் அத்தனை பேரும் ஒன்றாகப் போராடத் தொடங்கியிருக்கிறார்கள். இனியாவது அவர்களின் குரலுக்கு செவிசாய்த்து, நிம்மதியாக அவர்கள் தொழில் செய்யும் நிலையை ஏற்படுத்த வேண்டியது அரசாங்கத்தினதும், பொறுப்பான அமைச்சரினதும் கடமை. ஆனால் அதைச் செய்யாது 'மீனவர்களுக்கு மதுபோதை. அதனால் தான் போராடுகிறார்கள்' என்று, மீனவர்களின் போராட்டத்தைக் கொச்சைப்படுத்துவதும், அரசியல் செய்வதும் இன்னும் பிரச்சினையை கொழுந்துவிட்டெரியவைக்கும் என்பதையும் உரியவர்கள் உணரவேண்டும். சாது மிரண்டால் காடு மட்டுமல்ல, கடலும் தாங்காது!

**நாளொரு நல்வார்த்தை**

"வெற்றியடைவதற்கு நாம் முதலில் நம்மால் முடியும் என்று நம்ப வேண்டும்".

*- நிகோஸ் கசான்ட்ஜாகிஸ்*




# மீனவர்கள் விவகாரத்துக்கு விரைவில் தீர்வு அவசியம்

## க.வி.விக்னேஸ்வரன் எம்.பி. வலியுறுத்து

**யாழ்ப்பாணம், பெப். 3**



**இந்திய - இலங்கை மீனவர்கள் விவகாரத்தில் அரசு இனிமேலும் பாராமுகமாக இருக்காது. எமது மீனவர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் க.வி.விக்னேஸ்வரன் வலியுறுத்தியுள்ளார்.**

இதுதொடர்பில் அவர் அனுப்பியுள்ள அறிக்கையில் உள்ளதாவது:-

கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கும் அன்றாடப் பிரச்சினைகள் பல வருடங்களாகவே உள்ளன. எல்லை தாண்டும் இந்திய இழுவைப் படகுகள் மீனவர்களது வாழ்வாதாரத்தை முற்றாக அழித்து வருகின்றன. எமது மீன்வளங்களை இல்லாது ஒழிக்கும் நடவடிக்கையாகவே இவை அமைந்துள்ளன. முன்னர் இந்தியக் கடல் எல்லைக்குள் இருந்த இடங்களில் கடல்வளங்கள் பலவற்றையும் இல்லாமல் ஆக்கியவர்களே, இப்போது இழுவைப் படகுகள் மூலம் எமது வளங்களையும் சூறையாடி வருகின்றனர்.

இவ்வாறு தொடர்ந்தால் அது எமது மீனவர்களையே வெகுவாகப் பாதிக்கும். ஆனால் இதே நேரத்தில் வன்முறையில் ஈடுபடுவோர் யார்? எதற்காக அவ்வாறு ஈடுபடுகின்றார்கள் என்பதை நாம் ஆராய்ந்து அறிய வேண்டும். மூன்றாம் தரப்பினரின் உள்ளீடுகள் இதில் சம்பந்தப்பட்டுள்ளதோ என்பதையும் நாம் ஆராய வேண்டும் - என்றுள்ளது.

(ம-4-இ)

# மீனவர்களை விடுக்கக்கோரி டில்லிக்கு ஸ்டாலின் கடிதம்

கொழும்பு, பெப். 3

இலங்கைக் கடற்படையினரால் சிறைப் பிடிக்கப்பட்டுள்ள 21 மீனவர்களை விடுவிக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு கோரி, இந்திய மத்திய அரசுக்கு, தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வெவ்வேறு சம்பவங்களில் தமிழக மீனவர்கள் 68பேர், இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு, தமிழகம் மற்றும் மத்திய அரசு மேற்கொண்ட கடும் முயற்சிக்குப் பின்னர் விடுவிக்கப்பட்டனர். அவர்கள் தாயகம் திரும்பக் காத்திருக்கின்றனர்.

இந்த நிலையில், தமிழக மீனவர்கள் மீண்டும் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இது மீனவ மக்களிடையே பீதியையும், கொந்தளிப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

ஆகையால், கைது செய்யப்பட்டுள்ள தமிழக மீனவர்கள் அனைவரையும் விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றுள்ளது.

(ம-4-இ)

**நாளை**

**04.02.2022**
**வெள்ளிக்கிழமை**
**தை 22**

சுபநேரம் : 06.35 - 08.05
ராகுகாலம் : 11.05 - 12.35

**இலங்கையின் சுதந்திர தினம், உகை புற்று நோய் தினம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** உங்களுடன் வேலை பார்ப்பவர்களால் வந்த சிரமம் விலகும். சுபச்செய்திகள் வரும். நீங்கள் செய்யும் பணி சிறப்படையும். எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும் அதை சமாளிப்பீர்கள்.

**இடபம்:** எதிர்ப்பாலினத்தைச் சேர்ந்த ஒருவரின் உதவி கிடைக்கும். பொதுநல சேவை செய்து பிறரிடம் பாராட்டுப் பெறுவீர்கள். மற்றவர் நலனில் கவனம் செலுத்த வேண்டியிருக்கும்

**மிதுனம்:** கிடைத்த வாய்ப்பைத் தவறவிடாமல் சிறப்பாகப் பயன்படுத்துவீர்கள். புதிதாக நட்பாகும் நபர்களிடம் அதிக நெருக்கம் காட்ட வேண்டாம். சிறு சங்கடம் இன்றே நீங்கும்.

**கடகம்:** பணியாளர்கள் அகங்காரம் இன்றிச் செயற்படுவது நல்லது. ரகசியங்களை கையாளுவதில் கவனம் தேவை. சாதனை புரிவீர்கள். பணியாளர்களுக்கு வேலைப்பளு சற்றுக் குறையும்.

**சிம்மம்:** கூடுதல் முயற்சி எடுப்பதால் வெற்றி வாய்ப்பு அதிகரிக்கும். உங்களது கௌரவம் அதிகரிக்கும்படியான செயல் ஒன்றைச் செய்வீர்கள். சாதகமான பலன்களை பெறுவீர்கள்.

**கன்னி:** பொறுப்பான பணியில் உள்ளோர் பயணம் செல்ல நேரலாம். புதிய வேலைக்காக காத்திருப்பவர்களுக்கு நல்ல செய்தி வரும். மனதுக்குப் பிடித்தவர்களை சந்தித்து சந்தோஷம் அடைவீர்கள்.

**துலாம்:** அதிர்ஷ்டம் கூடும். கூடுதலாக உழைத்து பாராட்டுப் பெறுவீர்கள். சவால்களை எளிதாக முடிப்பீர்கள். சிறு வெற்றி ஒன்று கிடைக்கக்கூடும். உங்களின் திட்டம் சிறு திருப்பத்துக்குப் பிறகு நிறைவேறும்.

**விருச்சிகம்:** நண்பர்களுக்கு உதவி செய்து நிம்மதியை ஏற்படுத்துவீர்கள். உங்களது செயற்பாடுகளிலும், பணியிலும் அதிக கவனம் தேவை. புதிய திட்டத்தில் மாறுதல் செய்வதால் வெற்றி கிடைக்கும்.

**தனுசு:** பேச்சு, செயலில் கவனமாக இருக்கவேண்டிய நாள். புதிய நபர்களை அதிகம் நம்பாமல் எச்சரிக்கையாக பழகுங்கள். பாராட்டுக்களை பற்றி அதிகம் பெருமிதம் கொள்ள வேண்டாம்.


**மகரம்:** சிறிய செலவு உண்டாகலாம். விரும்பிய மாற்றம் வரும். வாழ்வில் வெளிச்சமான சூழல் உருவாகி மகிழ்ச்சி தரும். மன நிறைவுக்காக கூடுதலாக செலவு செய்ய வேண்டி வரலாம்.

**கும்பம்:** குடும்பத்தில் தேவையற்ற பிரச்சினைகள் உருவாக விடாதீர்கள். எதிர்பார்த்த உதவி கிடைப்பதில் தாமதம் ஏற்படக்கூடும். மேலதிகாரியின் உத்தரவை மீற முயற்சிக்க வேண்டாம்.

**மீனம்:** நண்பர்களுடன் கருத்து வேற்றுமை ஏற்பட்டாலும் சரியாகிவிடும். மனதில் தோன்றும் கற்பனைக் கவலைகளை விரட்டுங்கள். கூடுதல் முயற்சி காரணமாக எடுத்த செயலில் வெற்றி காண்பீர்கள்.

# 57 நாடுகளில் பரவிய உருமாறிய ஒமிக்ரோன்

## உலக சுகாதார அமைப்பு தெரிவிப்பு



**ஜெனிவா, பெப்.3**

**உருமாறிய ஒமிக்ரோன் வைரஸ் தொற்று இதுவரையில் 57 நாடுகளில் பரவியுள்ளது என உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.**

கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் பரவ ஆரம்பித்த ஒமிக்ரோன் வைரஸ் உலகம் முழுவதும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றது. அத்துடன் ஒமிக்ரோன் வைரஸ் பிஏ.1, பிஏ 1.1, பிஏ.2 மற்றும் பிஏ.3 எனவும் உருமாற்றம் அடைந்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் தற்போது 57 நாடுகளில் பிஏ.2 வகை ஒமிக்ரோன் வைரஸ் பரவியுள்ளது என உலக சுகாதார அமைப்பு எச்சரித்துள்ளது.

இந்தியாவில் கடந்த 2 வாரங்களாக ஒமிக்ரோன் தொற்றால் 3 ஆவது அலை ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)



# யூடியூப் தளத்தில் மோடி முதலிடம்

புதுடில்லி, பெப்.3

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, யூடியூப் தளத்தில் 1 கோடி பயநர்களுக்கு மேல் பெற்று சாதனை படைத்துள்ளார்.

இந்தியப் பிரதமர் மோடியின் நரேந்திர மோடி என்ற யூடியூப் சனலில் சுமார் 10 மில்லியன் பயநர்களை அவர் பெற்றுள்ளார். இந்த நிலையில் உலக நாடுகளின் தலைவர்களில் யூடியூப் தளத்தில் அதிக பயநர்களைப் பெற்ற தலைவராக தொடர்ந்து மோடி முதலிடத்தில் நீடித்து வருகிறார். (ச-இ)

# வலையில் சிக்கிய அபூர்வ மீன்

ஒரிஸா மாநிலம் திக்கா பகுதியில் மீனவர் ஒருவர் வீசிய வலையில் 2 கோடி பெறுமதியான அரிய வகை மீன் சிக்கியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மீனின் வயிற்றில் உள்ள சில பொருள்கள் மருத்துவத் துறையில் சில அரிய நோய்களைக் குணப்படுத்த பயன்படுத்தப்படுகிறது.

இதனால் இந்த மீனை பல மருத்துவ நிறுவனங்கள் வாங்குவதற்குப் போட்டி போடுகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# 8 மனைவிகளுடன் ஒரே வீட்டில் வாழ்பவர்

## சமூக வலைத்தளத்தில் 'ட்ரெண்ட்'



தாய்லாந்தில் இளைஞர் ஒருவர் 8 பெண்களை திருமணம் செய்து ஒன்றாக வசித்து வரும் ஒளிப்படம் இணையத்தில் வைரலாகி வருகின்றது.

தாய்லாந்து நாட்டைச் சேர்ந்த ஓங் டாங் சோரூட் என்பவர் டாட்டூ கலைஞராக பணியாற்றி வருகிறார். இவர் 8 பெண்களை வரிசையாக திருமணம் செய்து ஒரே வீட்டில் சந்தோஷமாக வாழ்ந்து வருகிறார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவரின் அனைத்து மனைவிகளும் சோரூட் மீது மிகுந்த காதலுடன் இருக்கின்றனர் எனவும் இவர்களுக்கிடையில் எவ்வித சண்டை, பொறாமை போன்றன எதுவும் வருவதில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. இவர் தனது காதல் கதையை ஊடகம் ஒன்றுக்கு பகிர்ந்துள்ளார்.

அதில் சோரூட், தனது அனைத்து மனைவிகள் மீதும் அளவு கடந்த காதல் வைத்துள்ளாராம். 8 மனைவிகளைப் பார்த்த இடத்திலேயே அவரது மனதைப் பறிகொடுத்துவிட்டாராம்.

முதல் மனைவியை ஒரு நண்பரின் திருமணத்தில், இரண்டாவது மனைவியை சந்தையிலும், மூன்றாவது மனைவியை மருத்துவமனையிலும் 4, 5 ஆவது மற்றும் 6வது மனைவியை இன்ஸ்டாகிராம், பேஸ்புக் தளத்திலும் 7ஆவது மனைவியை அவரது தாயுடன் கோயிலுக்கு செல்லும் போதும், எட்டாவது மனைவியை சுற்றுலா சென்ற இடத்தில் பார்த்து காதல் வயப்பட்டு திருமணம் செய்தேன் எனத் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் அவர் தனது 8 மனைவிகளுடன் இருக்கும் ஒளிப்படம் இணையத்தில் வைரலாகி வருகின்றது. (ச-இ)

# கடற்கரைக்கு செல்ல அனுமதி

சென்னை, பெப்.3

தமிழகத்தில் கொரோனாத் தொற்று குறைந்துவரும் நிலையில் சென்னையில் உள்ள கடற்கரைகளுக்கு மக்கள் செல்லலாம் என சென்னை மாநகராட்சி அறிவித்துள்ளது.

தமிழகத்தில் கடந்த மாதத் தொடக்கத்தில் கொரோனா தொற்று அதிகரித்த நிலையில் கோயில்கள், தேவாலயங்கள் மற்றும் கடற்கரைக்குச் செல்ல மக்களுக்கு தடை விதிக்கப்பட்டது. இந்த நிலையில், சென்னையில் உள்ள மெரீனா உள்ளிட்ட கடற்கரைகளுக்கு பொதுமக்கள் செல்ல தற்போது அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# மூதாட்டி வன்புணர்வு; இளைஞருக்கு வலைவீச்சு

புதுவை மாநிலம் பாகூர் அருகே உள்ள வயலில் தனியாக வேலை செய்த 63 வயதுடைய மூதாட்டியை தாக்கி பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவரை பொலிஸார் தேடி வருகின்றனர்.

வயலில் தனியாக வேலை செய்து கொண்டிருந்த 25 வயது மதிக்கத்தக்க இளைஞர் மூதாட்டியிடம் செல்போன் கேட்டுள்ளார்.

சற்று தயங்கிய மூதாட்டி, குறித்த இளைஞரை விசாரித்தபடி தான் வைத்திருந்த செல்போனை கொடுத்தார். அதை வாங்கி பேசியவாறு, திடீரென அங்கிருந்த ஒரு தடியால் மூதாட்டியைத் தாக்கியுள்ளார்.

இதில் கழுத்தில் படுகாயமடைந்த மூதாட்டி மயங்கி கீழே வீழ்ந்த நிலையில் அங்குள்ள மறைவான இடத்துக்கு இழுத்துச் சென்று துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் பொலிஸார் குறித்த இளைஞரை தேடி வருகின்றனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தொழிலாளர்களை நசுக்கும் சர்வாதிகாரத்தை எதிர்ப்போம்

## கரு ஜயசூரிய அழைப்பு

**கொழும்பு, பெப். 3**

**உழைக்கும் மக்களின் உரிமைகளை நசுக்கத் தயாராகும் சர்வாதிகார ஆட்சியாளர்களுக்கு எதிராக, அனைவரும் குரல்கொடுக்க வேண்டும் - என்று நீதியான சமுதாயத்துக்கான தேசிய இயக்கம் அழைப்பு விடுத்துள்ளது.**

இதுதொடர்பில் அந்த இயக்கத்தின் தலைவர் கரு ஜயசூரிய தெரிவிக்கையில்:-

இலங்கையில் உழைக்கும் மக்களின் வேலை நிறுத்த உரிமையை தடை செய்யவேண்டும் என்று நீதியமைச்சர் கூறியுள்ளமையே தற்போதைய அரசின் கருத்தாக இருந்தால், அது நாட்டின் ஜனநாயகம் மற்றும் உழைக்கும் மக்களின் சுதந்திரத்தின் மீதான கொடிய தாக்குதலாகவே கருதப்படவேண்டும்.

அரசுக்குள் அத்தகைய நடவடிக்கையால் ஏற்படக்கூடிய பாதகமான விளைவுகள் குறித்து கவனம் செலுத்தவேண்டும். இந்தக் கருத்தை உரிய தரப்பினர் திரும்பப்பெற வேண்டும்.

தொழிற்சங்கத்தின் உரிமைகள், அங்கீகரிக்கப்பட்ட மனித உரிமையாகும். இந்த உரிமைகள் உழைக்கும் மக்களின் பறிக்க முடியாத உரிமை மட்டுமல்ல, சமூகத்தின் நியாயப்படுத்தல் மற்றும் நீடித்த அமைதிக்கான ஒரு சக்திவாய்ந்த காரணியாகவும் பார்க்கமுடியும்.

எனவே இவ்வாறான முயற்சிகளை முறியடிக்க நாட்டிலுள்ள அனைத்து உழைக்கும் மக்களையும் நிபந்தனையின்றி ஒன்றிணையுமாறு அழைப்பு விடுக்கின்றோம் -என்றார். (ம-4-இ)



# சபுகஸ்கந்தவுக்கு மசகு எண்ணெய்!

## அமைச்சரவை அனுமதி

கொழும்பு, பெப். 3

சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்புக்குத் தேவையான மசகு எண்ணெயை விநியோகிப்பதற்கு எரிசக்தி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

எதிர்வரும் ஜூலை மாதம் வரைக்கும் மசகு எண்ணெயை விநியோகிப்பதற்கு தற்போது தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதன் பின்னர் வருகின்ற காலங்களுக்குத் தேவையான மசகு எண்ணெயை விநியோகிப்பதற்குரிய நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளன.

சுத்திகரிப்புக்குத் தேவையான மசகுஎண்ணெயை விநியோகிப்பதற்காக சைப்பிரஸ் நாட்டிலிருந்து முன்மொழிவொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 180 நாள்கள் கடன் அடிப்படையில் மசகு எண்ணெயை விநியோகிப்பதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள முன்மொழிவை, அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள விசேட நிரந்தரப் பெறுகைக் குழுவின் மதிப்பீட்டுக்கு உட்படுத்தி, அதன் ஆரம்பக் கட்டமாக 4 லட்சத்து 50 ஆயிரம் பீப்பாய்களை விநியோகிப்பதற்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. அந்தப் பரிந்துரைகளுக்கமைய குறித்த மசகு எண்ணெயை விநியோகிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (ம-4-இ)

# 14 ரயில் சேவைகள் இடைநிறுத்தம்

கொழும்பு, பெப். 3

ரயில் கட்டுப்பாட்டாளர் 17பேருக்கு கொரோனாத் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து 14 ரயில் சேவைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன என்று ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

இதுதொடர்பில் ரயில்வே பிரதி பொது முகாமையாளர் ஏ.டி.ஜி. செனவிரட்ன தெரிவித்ததாவது:-

பிரதான ரயில் வழிப் பாதைகளில் 6 ரயில் சேவைகளும், கடல்வழி மார்க்க ரயில் பாதை மற்றும் களனிவெளி ரயில் பாதையில் 4 ரயில் சேவைகளும், புத்தளம் ரயில் பாதையில் 3 ரயில் சேவை களும், வடக்கு ரயில் வழிப்பாதையில் குருநாகல் வரை சேவையில் ஈடுபடுத்தப்பட்ட ரயில் ஒன்றும் இடைநிறுத்தப்பட்டுள்ளன - என்றார். (ய-இ)



## தடைசெய்யப்பட்ட

# மோட்டார் சைக்கிள்களுடன் இருவர் கொழும்பில் கைது

கொழும்பு, பெப். 3

இலங்கையில் தடை செய்யப்பட்ட ரூ.1.2 கோடி பெறுமதியான இரண்டு மோட்டார் சைக்கிள்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

காலி - கொழும்பு பிரதான வீதியின் ஊடாகப் பயணித்துக்கொண்டிருந்த 100 மோட்டார் சைக்கிள்கள் கொண்ட பேரணியிலே இந்த மோட்டார் சைக்கிள்கள் கண்டுபிடிக்கப்பட்டன, அதில் பயணித்த களுத்துறை பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞர்கள் இருவர் அழுத்கம நகர போக்குவரத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். (ம-ய-இ)

# மஹிந்த யாப்பா நலம்பெற சீனாவின் சபாநாயகர் கடிதம்

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன விரைவில் குணமடைவதற்கு பிரார்த்தித்து, சீனமக்கள் குடியரசின் தேசிய மக்கள் காங்கிரஸின் நிலைக்குழுவின் தலைவரும் சபாநாயகருமான லீ சன்ஷு கடிதமொன்றை அனுப்பியுள்ளார். கொரோனா சவாலின் ஆரம்பத்திலிருந்து இலங்கையும் சீனாவும் ஒன்றுக்கொன்று பரஸ்பர உதவிகளைப் புரிந்திருப்பதுடன், இதன் மூலம் இரு நாடுகளுக்கும் இடையிலான பாரம்பரிய உறவு பலமடைந்துள்ளது. தொற்றுநோய்க்கு எதிராகப் போராட சீனா தொடர்ந்தும் இலங்கைக்கு உதவிகளை வழங்கும் என்றும் சீன சபாநாயகர் தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார். (ஏ-இ)

# உரவிலையைக் கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்கும்

## இராஜாங்க அமைச்சர் சானக்க வக்கும்புர

கொழும்பு, பெப். 3

உரத்தின் விலை அதிகரிப்பைக் கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளது என்று இராஜாங்க அமைச்சர் சானக்க வக்கும்புர தெரிவித்தார்.

மேலும் அவர் கூறியதாவது:-

நாட்டில் உரத்துக்கான தட்டுப்பாடு இல்லை. எவர் வேண்டுமா[illegible] இறக்குமதி செய்யமுடியும். எனினும் உரத்தின் விலைகள் அதிகரித்து[illegible]ன என்று மக்[illegible] தெரிவிக்கிறார்கள். [illegible]வே எதிர்காலத்[illegible]தில் மாற்றங்கள் [illegible] உரத்தின் வி[illegible] [illegible]றவடையும். வி[illegible] [illegible]ளுக்கு தேவை[illegible] [illegible]ான உரத்[illegible] [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனியார் ஊழியர்களுக்கும் 5,000 ரூபா கொடுப்பனவு

## ஜனாதிபதிக்கு கடிதம்

**கொழும்பு, பெப். 3**

**அரச ஊழியர்களுக்கு வழங்கப்படும் 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவை, தனியார் ஊழியர்களுக்கும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கோரி, நிறுவனங்களுக்கு இடையிலான ஊழியர் சங்கம், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு கடிதம் அனுப்பியுள்ளது.**

நாட்டில் தற்போது வாழ்க்கைச் செலவு உயரும்போது உழைக்கும் மக்கள் அனைவருக்கும் வழங்கப்படும் நிவாரணம் கிடைக்க வேண்டும். அரச ஊழியருக்கு 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்பட்டதைப் போன்று, தனியார் துறையினருக்கும் வழங்கப்படவேண்டும். 80 வீதமான தனியார் துறை ஊழியர்களில் 60 வீதமானோர், 25 ஆயிரம் ரூபாவுக்கும் குறைவாகவே சம்பளம் பெறுகின்றனர் என்று சங்கம் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது. (ம-4,இ)



## டிப்பர்- மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் படுகாயம்

வவுனியா, பெப். 3

வவுனியா மாவட்ட செயலகத்துக்கு முன்பாக ஏ9 வீதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். டிப்பருடன் மோட்டார் சைக்கிள் மோதியே இந்த விபத்து சம்பவித்தது என்று தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருதாவது:

ஓமந்தை பகுதி நோக்கி பயணித்துக்கொண்டிருந்த டிப்பர் வாகனமொன்று மாவட்ட செயலகத்துக்கு முன்பாக திடீரென நிறுத்தப்பட்டுள்ளது. இதையடுத்து பின்னால் வந்த டிப்பர் வாகனம் முன்னால் சென்றுகொண்டிருந்த டிப்பருடன் மோதுண்டு விபத்துக்குள்ளானது. தொடர்ந்து மோட்டார் சைக்கிள் ஒன்றும் டிப்பருடன் மோதியுள்ளது.

இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவரே படுகாயமடைந்துள்ளார். அவர் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். சம்பவ இடத்துக்குச் சென்ற வவுனியா போக்குவரத்துப் பொலிஸார் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (வ-18,110)

## கஞ்சாவுடன் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், பெப். 3

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கடற்கரை வீதியில் கஞ்சாவை உடைமையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு கிடைத்த புலனாய்வுத் தகவலின் அடிப்படையில் இந்தக் கைது இடம்பெற்றுள்ளது.

கைது செய்யப்பட்ட நபரிடமிருந்து ஒரு கிராம் 980 மில்லி கிராம் கஞ்சா கைப்பற் [illegible]

## நீதிமன்றில் அடாவடி; மதுப்பிரியருக்கு சிறை

கொடிகாமம், பெப். 3

சாவகச்சேரி நீதிமன்றத்துக்கு மதுபோதையில் சென்று தகாத முறையில் நடந்து கொண்ட நபருக்கு ஒரு வருட சிறைத்தண்டனையும், 3 ஆயிரத்து ஐநூறு ரூபா தண்டமும் விதிக்கப்பட்டுள்ளது. சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குத் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டு தீர்ப்பளிக்கப்பட்டது. (வ-159)

## வெள்ளடியன் சேவல் திருட்டு; சந்தேகநபர் ஒருவர் கைது

காரைநகர், பெப்.3



காரைநகர் பகுதியில் கோழிச் சண்டைக்கு ஈடுபடுத்தப்படும் வெள்ளடியன் சேவலை திருடிய குற்றச்சாட்டில் சந்தேகநபர் ஒருவரை ஊர்காவற்றுறை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

காரைநகர் மணியம் வீதியில் 8ஆயிரம் ரூபா பெறுமதியான வெள்ளடியன் சேவல் திருட்டு போயுள்ளதாக உரிமையாளரால் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிலையில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு சந்தேகநபர் ஒருவரை கைது செய்துள்ளனர். (ச)

## முல்லை செம்மலை வீதியில் கஞ்சாவுடன் ஒருவர் கைது!

முல்லைத்தீவு, பெப். 3

முல்லைத்தீவு, செம்மலை வீதியில் ஒரு கிலோகிராம் கஞ்சா வைத்திருந்த ஒருவரை பொலிஸார் நேற்று முன்தினம் கைதுசெய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர் திருகோணமலையைச் சேர்ந்த 35 வயதுடையவர் எனவும் இவர் முல்லைத்தீவு, மாத்தளன் பகுதியில் கடற்றொழிலில் ஈடுபட்டு வந்தார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய முல்லைத்தீவு, செம்மலைப் பகுதியில் சந்தேகத்தில் மறித்து சோதனைசெய்தபோது அவரிடமிருந்து கஞ்சா [illegible]

சம்ப[illegible]

மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்




**எ**ன்னதான் அரசாங்கம் சாமன்களுக்குத் தட்டுப்பாடு இல்லை எண்டு கற்பூரத்தைக் கொளுத்திச் சத்தியம் செய்தாலும், கடைக்காரர் மனம் வைச்சால்தான் எல்லாம் சனத்துக்கு கிடைக்கும் எண்டதுதான் இங்கத்தை நிலைமை. இப்ப ஒரு ஆறுமாசமா காஸுக்கும், அங்கருக்கும் கடும் தட்டுப்பாடு. விலையைக் கூட்டுறதுக்காகத்தான் இப்பிடி தட்டுப்பாடு மாதிரிக் காட்டுகினம் எண்டுதான் எல்லாரும் நினைச்சம். அதின்படி விலையும் சர்ரெண்டு ஏறிச்சு. அதுக்குப் பிறகாவது உதுகள் ஒழுங்காக் கிடைக்குமெண்டு நம்பினவைக்கு நாமம் தான் கிடைக்குது. அதிலையும் காஸ் வாங்கிறதெண்டா, கைலாசாவுக்கு போனாலும் நடக்கிற காரியமாப் படேலை. அந்தளவுக்கு கண்ணிலையும் காணக்கிடைக்குதில்லை.

ஆனால் டொலர் பிரச்சினை எல்லாம் தீர்ந்திட்டுது. இனி தாராளமா காஸ் கிடைக்கும் எண்டு அரசாங்கமும், காஸ் விக்கிற கொம்பனியும் சொல்லிக்கொண்டே இருக்கினம். ஆனால், 'வாம்மா மின்னல்' எண்ட கணக்கில, கடையளில வந்திறங்கின கையோடயே காஸ் சிலிண்டர் எல்லாம் நொடியில மாயமாப் போகுது. குறிப்பா வவுனியாவில இந்தக் காஸை வைச்சு புதுசா புதுசா பிஸ்னஸ் கண்டுபிடிக்கினம். வவுனியாவில உள்ள பெரிய சாப்பாட்டுக்கடைகள், ஹொட்டல்கள் எல்லாத்துக்கும் எந்தக் குறையும் இல்லாமல் காஸ் போய்க்கொண்டிருக்கு. இருபத்து நாலு மணித்தியாலமும் அங்க காஸில அடுப்பெரியுது. ஆனால் சாதாரண சனங்கள் வீட்டில காஸ் இல்லாமல் வயிறுதான் எரியுது. இப்பிடிச் சனத்தின்ர அந்தரத்தை வைச்சு காஸை காசாக்கிற ஆக்கள் முளைச்சுக் கொண்டே இருக்கினம். கட்டாயம் காஸ் வாங்கிக்கொண்டு தான் வீட்ட போகோணும் எண்டு வாற ஆக்களிட்ட, "எங்கட கடையில காஸ் இல்லை. ஆனால் வேற ஒரு இடத்தில இருக்கு. காசு கொஞ்சம் கூடவரும்" எண்டு சில கடைக்காரர் தூண்டில் போடுவினம். "அண்ணை, காசைப் பற்றிக் கவலை இல்லை, காஸ் கிடைச்சால் சரி" எண்டு வாறவை சொல்லிச்சினம் எண்டா, உடனேயே அவையின்ர போன் நம்பரையும், அட்ரஸையும் வாங்குவினம். பொழுதுபடுகிற நேரத்துக்கு அந்த நம்பருக்கு ஒரு கோல் வரும். "அண்ணை, காஸ் வேணுமெண்டு கேட்டனியளாம். ஒரு சிலிண்டர் இருக்கு. ஆனால் 5000 ரூபா வரும். உங்களுக்காக 4500 ரூபா போடச் சொல்லி முதலாளி சொன்னவர். வேணுமெண்டா சொல்லுங்கோ. வீட்டை கொண்டந்து தரலாம்" எண்டு அந்தக் கோலில பேரம் பேசுவினம். ஓமெண்டு பதில் சொன்னால், அடுத்த அஞ்சாவது நிமிசம் அவையின்ர வீட்டுக்கு காஸ் சிலிண்டர் போயிடும்.

என்ன விலைக்கு காஸைக் குடுக்கலாம் எண்டு கொம்பனி அறிவிச்சதை விட இன்னொரு மடங்கு வைச்சு இப்பிடிக் களவா விக்கிற விளையாட்டு வவுனியாவில கூடிக்கொண்டே போகுது. கடையளில இல்லாமல் போற காஸ் சிலிண்டர் எப்பிடி இப்பிடிக் கறுப்புச் சந்தை வியாபாரிகளுக்கு போகுது? வேற சாமான் எண்டால் கணக்கு வழக்கு தெரியாது. ஆனால் காஸ் அப்பிடி இல்லை. 100 சிலிண்டர் காஸ் புதிசா எடுக்க வேணுமெண்டால், அதுக்கு பதிலா பாவிச்சு காஸ் முடிஞ்ச வெறுமையா இருக்கிற 100 சிலிண்டரைக் குடுக்கோணும். இதை வைச்சுக் கொண்டு எத்தனை கடையளில எவ்வளவு சிலிண்டர் இருக்கு, எத்தினை வித்தாச்சு எண்டெல்லாம் ஈஸியாக் கண்டுபிடிக்க முடியும். உந்த நுகர்வோர் அதிகார சபை, விலைக்கட்டுப்பாட்டுத் திணைக்களம் எண்டு இப்பிடி கறுப்பு சந்தைக்காரரை பிடிக்க வேண்டிய ஆக்கள் எங்க போட்டினம்? ஏற்கனவே விலையேற்றங்களால கஷ்டப்படுற சனத்தை இந்த கறுப்புச் சந்தை வியாபாரியளிட்டயிருந்து காப்பாத்த உரியவை நடவடிக்கை எடுக்க மாட்டினமோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விபத்தில் காயமடைந்தவர் சிகிச்சை பயனின்றி சாவு!

யாழ்ப்பாணம், பெப். 3

மோட்டார் சைக்கிளில் பயணித்தநபர் மரத்துடன் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார். சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

சின்னச்சாமி கிருஷ்ணசாமி (வயது 58) என்ற நான்கு பிள்ளைகளின் தந்தையான குறித்த நபர், கடந்த 31ஆம் திகதி மோட்டார் சைக்கிளில் பயணித்தபோது கேவில் சந்தியில் வேகக் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானதில் படுகாயமடைந்தார். அவர் மந்திகை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். எனினும் சிகிச்சை பயனளிக்காது அவர் நேற்று உயிரிழந்தார். இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார்.

(ம-26)

சுருக்குவலை மீன்பிடி

# வடமராட்சி மீனவர்களால் வெளி மீனவர்கள் பிடிப்பு

## எச்சரிக்கையின் பின்னர் விடுவிப்பு

வடமராட்சி கடற்பகுதியில் தடைசெய்யப்பட்ட சுருக்கு வலையைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்ட வெளிப் பகுதி மீனவர்கள் 15 பேர் மடக்கிப் பிடிக்கப்பட்டனர்.

இந்திய மீனவர்களின் அத்துமீறலை உடன் கட்டுப்படுத்த வேண்டும் என்று வடமராட்சி மீனவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த நிலையிலேயே வடமராட்சிப் பகுதியில் புத்தளம், கற்பிட்டி, குருநகர் உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த 15 மீனவர்கள் தடைசெய்யப்பட்ட சுருக்கு வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்டுள்ளனர். இதையடுத்து அவர்கள் வடமராட்சி மீனவர்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டனர். பின்னர் படகுகளின் உரிமையாளர்கள் வரவழைக்கப்பட்டு எச்சரிக்கை செய்யப்பட்டு அனுப்பப்பட்டனர்.

(ம-26)

# மரண அறிவித்தல்

பிறப்பு 15 . 04 . 1937 — இறப்பு 30 . 01 . 2022



## திரு.நல்லையா.கனகரத்தினம்

(முன்னாள் முகாமையாளர், விவசாய திணைக்களம், பரந்தன்)

யாழ். திருநெல்வேலியை பிறப்பிடமாகவும் வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.ந.கனகரத்தினம் (முன்னாள் முகாமையாளர், விவசாய திணைக்களம், பரந்தன்) அவர்கள் ஞாயிற்றுக்கிழமை (30.01.2022) அன்று கொழும்பில் காலமானார். அன்னார் காலஞ்சென்ற நல்லையா, நாகரத்தினம் தம்பதியினரின் புத்திரனும் காலஞ்சென்ற கைலைநாயகியின் அன்புக் கணவரும், முகுந்தனின (இங்கிலாந்து), அன்புத் தந்தையுமாவார். அன்னார் தர்மினியின் அன்பு மாமனாரும், அஷ்விந்த், அக்ஷிதாவின், பேரனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், நாகலிங்கம், இரத்தினசிங்கம், கனகலிங்கம், சிவமுத்து, மனோன்மணி, அமிர்தவல்லி மற்றும் சிந்தாமணி, இராசலஷ்மி, அமிர்தலிங்கம் ஆகியோரின் சகோதரருமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 03.02.2022 வியாழக்கிழமை மு.ப 11.00 மணியளவில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்பு - 0772259569 - முகுந்தன் / 0713276969 - ஸ்ரீகனகசபை

# சுதந்திர தினத்துக்கு ஏற்பாடுகள் பூர்த்தி!

கொழும்பு, பெப். 3

இலங்கையின் 74ஆவது சுதந்திர தினத்துக்கான, அனைத்து ஏற்பாடுகளும் முழுமை செய்யப்பட்டுள்ளன என்று தேசிய பாதுகாப்பு மற்றும் இடர் முகாமைத்துவ இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

'நாளைய சவால்களை வெற்றி கொள்ளும் வளமான நாள்' என்ற தொனிப்பொருளில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையில் இந்த வருடம் சுதந்திர தின நிகழ்வு கடைப்பிடிக்கப் படவுள்ளது. இதில் சுமார் 6 ஆயிரத்து 500 பேர் பங்கேற்பர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை கொழும்பு நகரம் மற்றும் மேல் மாகாணத்தை மையப்படுத்தி விசேட போக்குவரத்து ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று மேல் மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்துள்ளார். சுதந்திர தினத்தன்று 21 வீதிகளின் போக்குவரத்துகள் மட்டுப்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் சுதந்திரதினப் பேரணியின்போது, கடற்படையினரால் 25 மரியாதை வேட்டுகள் நண்பகல் 12 மணியளவில் காலிமுகத்திடலில் தீர்க்கப்படும் என்று கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் நிசாந்த உலுகேதன்ன தெரிவித்துள்ளார். விமானப் படையினரின் சாகசங்களும் வானில் நிகழ்த்தப்படவுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ம-4-இ)

# மரண அறிவித்தல்

தோற்றம் 15 . 06 . 1948 — மறைவு 01 . 02 . 2022



## திருமதி மனோன்மணி சரவணமுத்து

மன்னார் இலுப்பைக்கடவையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மனோன்மணி சரவணமுத்து கடந்த (01.02.2022) செவ்வாய்க் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்து அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் பரிமளம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தம்பிராஜா சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பாலசிங்கம் மற்றும் மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், செல்வம், செல்வராணி, செல்வச்சந்திரன் (சுரேஷ்) செந்தூரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், சிவபாலன், சிவமாலா, சிந்துஜா, தர்சிகா ஆகியோரின் அன்பு மாமியும், கவினா, அபினா, தாரணி, சாருசன், அஸ்வின், அபிசன், நியா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.02.2022) வெள்ளிக்கிழமை பிற்பகல் 02.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இலுப்பைக் கடவை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொ.பே: 076 988 9312
076 381 6422

தகவல்: குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

பிறப்பு 05 . 12 . 1951 — இறப்பு 02 . 02 . 2022



## குலநாயகம் கலாவதி

(ஓய்வுபெற்ற ஆசிரியை - யா/விக்ரோறியாக் கல்லூரி)

யாழ். வட்டு வடக்கு, சித்தன்கேணியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட குலநாயகம் கலாவதி (ஓய்வுபெற்ற ஆசிரியை, யா/விக்ரோறியாக் கல்லூரி) அவர்கள் நேற்று (02.02.202 ) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரமுத்து சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற துரை பூமணி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற துரை குலநாயகம் (ஓய்வுபெற்ற களஞ்சியப் பொறுப்பாளர், போக்குவரத்து சபை) அவர்களின் பாசமிகு மனைவியும், சோபனா, பிரஜாத் ஆகியோரின் அன்புத் தாயாரும், சபாநாதன், சத்தியவதி, காலஞ்சென்ற பாலச்சந்திரன், சுந்தரேசன், ரேவதி, சிவாஜி, புனிதவதி ஆகியோரின் அன்பு சகோதரியும், காலஞ்சென்ற சூரியகாந்தி, தவரட்ணராஜா, செல்வமலர், சியான், கலாவதி, காலஞ்சென்ற கஜேந்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்பு:077 189 4693

தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# மரண அறிவித்தல்



பிறப்பு 24 . 05 . 1952

இறப்பு 02 . 02 . 2022

## திருமதி கதிரவேலு இராணி (சின்னம்மா)

புங்குடுதீவு 04 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி கதிரவேலு (தங்கராசா) இராணி (சின்னம்மா) நேற்று (02.02.2022) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - கண்மணி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற இளையதம்பி - முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், கதிரவேலுவின் அன்பு மனைவியும், கஜல்விழி, காலஞ்சென்ற சிவநந்தினி மற்றும் புஷ்பாஞ்சலி, ஜெயபாலினி (யாழ். போதனா வைத்தியசாலை சுகாதாரப் பணியாளர்), தனுஷா (சமுர்த்தி உத்தியோகத்தர் - புங்குடுதீவு), காலஞ்சென்ற இளந்திரையன் ஆகியோரின் அன்புத் தாயாரும், அருந்தவச்செல்வம், சசிக்குமார், சுரேஸ்குமார், காலஞ்சென்ற புவனேஷ்வரன் ஆகியோரின் மாமியாரும், விஜிதரன், யுகேதினி, இஷானி, திவிசனன், கவிஷனா, சதுஷனா, புவனிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.02.2022) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முனையப்புலம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
077958 8463
077 529 3138

(cs42659) (2.6)

தகவல்:
குடும்பத்தினர்

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 26 . 12 . 1955

இறப்பு 07 . 02 . 2019

## அமரர் திரு. வேலுப்பிள்ளை மனோகரன்

(ஓய்வூதியார்
யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி)

*திதி: திருதிகை* [03.02.2022]

பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
அன்பின் திருவுருவாய் எமக்கு வழி காட்டியாய்
உற்றார், உறவினர், நண்பர்களுக்கு இனியவராய்
வாழ்ந்து எம்மை விட்டு பிரிந்து மூன்று ஆண்டு மறைந்தய்யா!
எம் உள்ளங்களில் என்றும் நிலைத்திருக்கின்றீர்கள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

வெள்ளாம் போக்கட்டி,
கொடிகாமம்.

என்றும் நினைவில்
குடும்பத்தினர்

(cr.37427) (2.6)

# மரண அறிவித்தல்



தோற்றம் 01 . 12 . 1936

மறைவு 02 . 02 . 2022

## வேலுப்பிள்ளை முத்துத்தம்பி

கோப்பாய் வடக்கு, நாவற்கட்டையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை முத்துத்தம்பி நேற்று (02.02.2022) புதன்கிழமை இறைவனடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - செல்லாச்சி தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - தெய்வானப்பிள்ளை தம்பதியினரின் பாசமிகு மருமகனும், ஈஸ்வரியின் அன்புக் கணவரும், கிருபானந்தம் (தொழிநுட்ப உத்தியோகத்தர்), புவிமதி (அமெரிக்கா), ஜெயானந்தன் (ஆசிரியர்), தேவமதி (சுவிஸ்), தர்சினி (வைத்தியர்) ஆகியோரின் அன்புத் தந்தையும், மதுமதி (ஆசிரியர்), சாந்தன் (அமெரிக்கா), துஷ்யந்தி, புவனராஜன் (சுவிஸ்), ஜெரால்ட் ராஜகுலேந்திரன் (வைத்தியர்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், நிதுஷன், மிதுஷன், நிஸானா, அபிசாலினி, தனுஷன், தருனிகா, அனுவர்ஷா, யஸ்விதன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.02.2022) வியாழக்கிழமை முற்பகல் 08.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக முற்பகல் 10.00 மணியளவில் கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

**கோப்பாய்.**

தகவல்: குடும்பத்தினர்
076 294 3565
077 690 6825

(cs42621) (2.6)

# மரண அறிவித்தல்



பிறப்பு 22 . 07 . 1936

இறப்பு 30 . 01 . 2022

## வல்லிபுரம் பொன்னுச்சாமி

யாழ். தையிட்டியைப் பிறப்பிடமாகவும், யாழ். தட்டாதெரு, கனடா Scarborough ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட வல்லிபுரம் பொன்னுச்சாமி அவர்கள் கடந்த (30.01.2022) ஞாயிற்றுக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் செல்லம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரும், காலஞ்சென்றவர்களான செல்லப்பா வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், கண்மணி அவர்களின் ஆருயிர்க் கணவரும், றுபேந்தி, பிரகலாதன், பிரதாபன் ஆகியோரின் அன்புத் தந்தையும், லோகேந்திரன், நாராயணி, இளங் கோதை ஆகியோரின் அன்பு மாமனாரும்,தர்ஷன், கிரோஷன், தாரிணி, சகானா, வைஷ்ணவி, அஜெய்னன், அஜானன் ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்ற வர்களான சிங்கராஜா, தர்மராஜா, சிவகுருநாதன் மற்றும் அரியமலர், செல்வமலர், அருளாநந்தசிவம், புஸ்பமலர் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்க ளான ராசம்மா, பொன்னுத்துரை, சின்னம்மா, தியாகராஜா, அழகரட்ணம் மற்றும் அன்னம்மா, செல்வராசா, ராஜரட்ணம், மனோன்மணி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் புகழுடல் இன்று (03.02.2022) வியாழக்கிழமை 9.30 AM முதல் 11.00 AM வரை Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada என்ற முகவரியில் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டு அன்றையதினம் 1:30 PM அளவில் Highland Hills Crematorium 12492 Woodbine Avenue, Gormley, Ontario, L0H 1G0, Canada இல் தகனக்கிரியைகள் இடம்பெறும்.

தொடர்புகளுக்கு
றுபேந்தி - மகன் -Mobile : +16473343837
பிரகலாதன் - மகன் -Mobile : +16478954119
பிரதாபன் - மகன் -Mobile : +14168754119

தகவல்:
குடும்பத்தினர்

(CS 18333) 1/6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு
## உள்நாட்டலுவல்கள் அமைச்சு
### ஆர்வத்தை தெரிவிப்பதற்கான கோரல்

கருத்திட்டத்திற்கான ஆலோசகரின் சேவையைக் கொள்முதல் செய்தல் - "யாழ்ப்பாணம் இன்குபேட்டர்கள் /முடுக்கிகளுக்கான வணிக மையத்தை அமைத்தல் மற்றும் செயற்படுத்துதல்"

**ஒப்பந்த இலக்கம்:** HA/F/PRO-RAR/Business Center -Jaffna

உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சகத்தின் சார்பில் அமைச்சக ஆலோசகர்கள் கொள்முதல் குழு. இங்கு விவரிக்கப்பட்ட சேவைகளை வழங்குவதில் தங்கள் ஆர்வத்தைத் தெரிவிக்க தகுதியான தனிப்பட்ட ஆலோசகர்களை அழைக்கிறது.

யாழ்ப்பாணத்தில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப இன்குபேட்டர்கள் / முடுக்கிகளுக்கான வியாபார நிலையத்தை ஸ்தாபித்தல். வியாபார மாதிரிகளைத் தயாரித்தல். உயர் மட்ட காலவரிசைகளை வழங்குதல். மைய முகாமைத்துவத்திற்கான வரைபடத்தை தயாரித்தல் மற்றும் ஒட்டுமொத்த திட்டத்தை வழங்குவதன் மூலம் வாடிக்கையாளருக்கு உதவுதல் உட்பட முழு கருத்திட்டத்திற்கும் ஆலோசனை வழங்குதல்.

ஆர்வமுள்ள தனிப்பட்ட ஆலோசகர்கள் தகுதிகள். இதே போன்ற பணிகள். தொழில்நுட்ப திறன்கள் மற்றும் பொருத்தமான நிபுணத்துவத்தை மேற்கொள்வதில் முந்தைய அனுபவம் ஆகியவற்றை நிரூபிக்க ஆவண ஆதாரங்களுடன் தேவையான விவரங்களை சமர்ப்பிப்பதன் மூலம் இந்த கோரிக்கைக்கு பதிலளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்

**"குறிப்பு விதிமுறைகள்"** மற்றும் " EOI தகவல் தாள் " இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. ஆர்வமுள்ளவர்கள் இந்த ஆவணங்களை https://www.moha.gov.lk/procurement/ வலைத்தளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்யலாம்.

தேசிய கொள்முதல் முகவராண்மையால் வெளியிடப்பட்ட ஆலோசகர்களைத் தேர்ந்தெடுப்பதற்கும் வேலை வாய்ப்பதற்கும் வழிகாட்டுதல்களில் கூறப்பட்டுள்ள நடைமுறைகளுக்கு இணங்க ஒரு ஆலோசகர் தேர்ந்தெடுக்கப்படுவார்.

**ஆர்வமுள்ள ஆலோசகர்கள் கணக்காளர் (கொள்முதல்), கொள்முதல் பிரிவு, உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சகத்தில் 2022.02.03 இலிருந்து 2022.02.17 வரை காலை 9:00 மணி முதல் 15:00 மணி வரை மேலும் தகவல்களைப் பெறலாம்.**

**தொலைபேசி** : +94 112 050 420 [Ext: 1612]
**தொலைநகல்** : +94 112 369 181
**மின்னஞ்சல்** : procurement.ha@gmail.com

**விண்ணப்பங்களை கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு 14:00 மணிக்கு 2022.02.17க்கு முன்பு வழங்கப்பட வேண்டும்.**

**தலைவர்,**
**அமைச்சு ஆலோசகர் கொள்முதல் குழு, கொள்முதல் பிரிவு,**
**உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சகம்**
**16 வது மாடி, "நில மெதுர",**
**எல்விட்டிகல மாவத்தை,**
**நாரஹேன்பிட்ட ,**
**கொழும்பு - 05.**

(cr.37493) (2.6)

## 33 வருடகால ஆசிரிய சேவையாற்றி
## ஓய்வுபெற்ற மணிவிழா நாயகனை வாழ்த்துகின்றோம்



Congratulations

Congratulations!

**31.05.2021**

**வரகவி, கவிஜோதி, செந்தமிழ் நாவலர், ஆசிரியமணி,**
**சமாதான நீதவான், சைவப்புலவர்**

## திரு. மயில்வாகனம் - சிவலிங்கம்

(B.A, PGDE) SLTS - I

**(ஆசிரியர், யா/ உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்)**

**சேவை விவரம்**

- யா/ மண்டைதீவு ம.வி - 17.08.1988 - 30.04.1993
- யா/ புங்குடுதீவு சண்முகநாதன் வித்தியாலயம் - 01.05.1993 - 31.12.1994
- யா/மண்டைதீவு ம.வி - 01.01.1995 - 31.12.2000
- யா/ கோண்டாவில் றோ.க.வித்தி - 01.01.2001 - 05.05.2010
- யா/ கொக்குவில் ஸ்ரீ இராமகிருஸ்ண வித்தியாலயம் - 06.05.2010 - 24.01.2012
- யா/ உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம் - 25.01.2012 - 31.05.2021

ஆசிரியர் அவர்களின் மணிவிழா நாளில் வாழ்த்துக்களை தெரிவிப்பதுடன் அவரது ஓய்வுகாலம் சிறப்பாகவும் நலமாகவும் அமைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வாழ்க வாழ்கவென வாழ்த்துவோர் :

**ஆசிரியர் நலன்புரிச்சங்கம்**
**யா/ உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம் உரும்பிராய்.**

(cs.42639) (2.6)

## வேலையாட்கள் தேவை

யாழில் இயங்கும் **Hotel Rolex** உணவகத்திற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.

1. சமையல் உதவியாளர்
2. உணவு பரிமாறுபவர்
3. பார்சல் கட்டுபவர்
4. துப்புரவு பணியாளர்
5. காசாளர் (இருபாலாரும் தேவை)

**077 8461 024**
**077 8096 859**

**இந்திய துணைத் தூதரகம்**
**யாழ்ப்பாணம்**

*****

**ஊடக அறிக்கை**

### அறிவித்தல்

யாழ். இந்திய துணைத்தூதரகம் யாழ். பல்கலைகழக கைலாசபதி கலையரங்கில் 03.02.2022 (வியாழக்கிழமை) மாலை 06.30 மணி தொடக்கம் இரவு 8.30 மணி வரை நடைபெற ஏற்பாடு செய்திருந்த இந்திய கலைஞர்கள் வழங்க இருந்த ஒடிசி நடன நிகழ்வு தவிர்க்க முடியாத காரணத்தால் இடம் பெறாது என்பதனை தெரவித்துக் கொள்கின் றோம்.

**யாழ்ப்பாணம்**
**02 பிப்ரவரி 2022**

(CR 37497) (3/6)

## மறக்கமுடியாத நினைவலைகள்

**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**



## அமரர் கந்தையா இராசரெத்தினம்

(பொன் அண்ணை)

தோற்றம் 23.12.1939 — மறைவு 16.01.2021

**திதி: வளர்பிறை திருதியை**

ஆண்டொன்று சென்றாலும்
ஆறாது அப்பா எம் துயரம்
அழுதழுது தவிக்கின்றோம் - உங்கள்
அன்பையும் பாசத்தையும் நினைத்து

19, [illegible]
நல்லூர் வடக்கு.

**15 ஆம் ஆண்டு நினைவஞ்சலி**



## அமரர் திருமதி மனோகரி இராசரெத்தினம்

தோற்றம் 03.04.1950 — மறைவு 25.04.2006

**திதி: பூர்வபட்ச திரியோதசி**

ஓடி மறைந்தது பதினைந்து ஆண்டுகள்
வாடி நிற்கிறோம் நாம் இங்கு
எம் முன் என்றும் இறையாகி நின்று
எமக்கு நல்லனவே தந்திடிவீர் அம்மா

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி!!!

**குடும்பத்தினர்**

(cs.42642) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறப்புச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், பெப். 3
நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானம் நடத்தும் வாராந்தச் சிறப்புச்சொற்பொழிவு, ஆலய சண்முக விலாச மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது.
சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறும் சொற்பொழிவில், தலைமையுரையை பரிபாலன சபைத்தலைவர் த.சோதிலிங்கமும், 'நவையறு காட்சி' என்ற விடயப்பொருளில் சிறப்புச் சொற்பொழிவை திருவாவடுதுறை ஆதீனம் புலவர், சைவப்புலவர் ஏ.அனுசாந்தனும் ஆற்றவுள்ளனர்.

(ம-ரி1)

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 15.06.1952 மறைவு 02.02.2022

எமது பிரதேச செயலகத்தின் புங்குடுதீவு சமுர்த்தி வங்கியில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும்
**திருமதி புவனேஸ்வரன் தனுஷா**
அவர்களின் அன்புத் தாயார்
**கதிரவேலு இராணி**
அவர்கள் நேற்று (02.02.2022) வியாழக்கிழமை காலமாகிவிட்டார். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

**உத்தியோகத்தர் நலன் புரிச்சங்கம்**
**பிரதேச செயலகம் வேலணை.**

(crs 42662) (2.6)

## கண்ணீர் அஞ்சலி

### அமரர் இராஜேஸ்வரி சோதிலிங்கம்



நீர்வேலி கந்தசுவாமி தேவஸ்தானத்தின் பரிபாலன சபை தலைவர் **திரு.தம்பிமுத்து சோதிலிங்கம்** அவர்களின் துணைவியார் **இராஜேஸ்வரி சோதிலிங்கம்** அவர்கள் இறை பதம் அடைந்த செய்தி அறிந்து ஆழ்ந்த துயர் கொண்டோம். அவரது இழப்பு அவர்களது குடும்பத்தாருக்கு ஈடுசெய்ய முடியாத ஒன்றாகும்.
அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்ம சாந்திக்கு நீர்வைக் கந்தனை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.


ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

**நீர்வேலி கந்தசுவாமி தேவஸ்தானம்**
**நீர்வேலி.**

**ஆலய பிரதம குருக்கள்**
**பரிபாலன சபை மற்றும்**
**அடியார்கள்.**

(CR 7139) 1-6

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த 04.01.2022 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவன்

### அமரர் வல்லிக்குட்டி ஜெயம்

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (03.02.2022) வியாழக்கிழமை பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.
அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

**வண்ணாங்கேணி,**
**பளை.**

**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

தோற்றம் 19 . 12 . 1947

மறைவு 01 . 02 . 2022



### திருமதி சோதிலிங்கம் இராஜேஸ்வரி

செட்டிச்சோலை அளவெட்டி வடக்கினை பிறப்பிடமாகவும் நீர்வேலி தெற்கினை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சோதிலிங்கம் இராஜேஸ்வரி அவர்கள் கடந்த (01.02.2022) இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கம் தங்கம்மா தம்பதியரின் கனிஸ்ட புத்திரியும், காலஞ்சென்ற தம்பிமுத்து நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், சோதிலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும். சாதனா, கல்பனா ஆகியோரின் அன்புத் தாயாரும், பாஸ்கரன், ஜதீஸ் ஆகியோரின் அன்பு மாமியாரும். காலஞ்சென்ற சண்முகசுந்தரம், இரத்தினம், பரராசசிங்கம் மற்றும் சுப்பிரமணியம், தவமலர் பாலகிருஸ்ணன் ஆகியோரின் அன்புச் சகோதரியும். மக்மில்லன், மதுமில்லன், மீரா, பிரவீன், நயனிக்கா ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் பின்னர் அறிவிக்கப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**கந்தன் கருணை,**
**நீர்வேலி தெற்கு,**
**நீர்வேலி.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**021 321 3443**
**076 367 1470**
**077 348 4932**

(CS 18...) 1/6

## மரண அறிவித்தல்

பிறப்பு 15 . 03 . 1925

இறப்பு 28 . 01 . 2022



### திரு.குழந்தைவேலு கந்தையா

**(ஓய்வுபெற்ற ஆசிரியர் - வீமன்காமம் மகாவித்தியாலயம், மாவிட்டபுரம்,** Srilanka)

யாழ். மாவிட்டபுரத்தை பிறப்பிடமாகவும் கொழும்பு, Dubai ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட குழந்தைவேலு கந்தையா அவர்கள் கடந்த (28.01.2022) வெள்ளிக்கிழமை அன்று Dubai இல் இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான குழந்தைவேலு செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நடராஜா கௌரியம்மா தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற தையல்நாயகி அவர்களின் அன்புக் கணவரும், சந்திரசேகரன், ரஞ்சனி (கனடா), காஞ்சனா (கனடா), அரவிந்தன் (Dubai) ஆகியோரின் அன்புத் தந்தையும், கலாஈஸ்வரன் (கனடா) பாலமுரளி (கனடா) தர்மினி (Dubai) ஆகியோரின் அன்பு மாமனாரும், தனுஷன், அருண், துளசி, காருண்யா ஆகியோரின் பேரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.02.2022) வியாழக்கிழமை Dubai இல் நடைபெறவுள்ளது.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**அரவிந்தன் - மகன் - +97144 208 059**
**ரஞ்சனி - மகள் - +1647 864 7772**
**காஞ்சனா - மகள் - +1416 218 9024**

**தகவல்: குடும்பத்தினர்**

(CS 18345) 1/6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உக்கிரமடைகிறது...

மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகள், கடற்படையினர், பொலிஸார் மற்றும் கடலோர காவற்படை அதிகாரிகள் என்போர் சமரசம் பேச வந்தபோதும், எழுத்துமூல உறுதிமொழியில்லாமல் போராட்டத்தைக் கைவிடமாட்டோம் என மீனவர்கள் தெரிவித்தனர். இதனால் அவர்கள் திரும்பிச் சென்றனர். சமரசப் பேச்சுக்கள் தோல்வியில் முடிவடைந்ததால், போராட்டம் இன்றும் தொடரும் என தெரிவிக்கப் பட்டுள்ளது.

மூன்றாவது நாளாகவும் , யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி, பருத்தித் துறை - பொன்னாலை வீதி என்பவற்றை இடைமறித்து மீனவர்கள் போராட்டத்தை நேற்றுத் தொடர்ந்தனர். இந்திய மீனவர்களின் இழுவைப்படகுகளால் அறுத்து நாசமாக்கப்பட்ட வலைகளையும் வீதியின் குறுக்கே மீனவர்கள் போட்டிருந்தனர். நேற்றும் வடமராட்சிப் பகுதி மீனவர்கள் கடற்றொழிலுக்குச் செல்லவில்லை. பருத்தித்துறை செயலகமும் போராட்டத்தால் முடக்கப்பட்டது. மீனவர்களின் வழிமறிப்புப் போராட்டத்தால் குறித்த இரு பிரதான வீதிகளூடான போக்குவரத்தும் துண்டிக்கப்பட்டி ருந்தது. எனினும் பாடசாலை மாணவர்கள் மட்டும் பயணிப்பதற்கு மீனவர்கள் ஒத்துழைப்பு வழங்கியிருந்தனர்.

இந்தநிலையில் மீனவர்களோடு பேச்சு நடத்தி, அவர்களின் போராட்டத்தை முடிவுக்கு கொண்டுவர மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகள், கடற்படையினர், பொலிஸார் மற்றும் கடலோர காவற்படை அதிகாரிகள் என்போர் எடுத்த முயற்சிகளும் பயனளிக்கவில்லை. "எழுத்து மூலமான உறுதிமொழி தராவிட்டால் போராட்டத்தைக் கைவிடமாட்டோம்" என்ற முடிவில் மீனவர்கள் உறுதியாக நின்றமையால், பேச்சு நடத்த வந்தோர் திரும்பிச் சென்றனர்.

இதேவேளை , போராட்டத்தில் ஈடுபடும் மீனவர்களுக்கு ஆதரவு தெரிவித்து வடக்கின் பல்வேறு பகுதிகளில் இருந்து மீனவர்களும், பொதுமக்களும் போராட்டம் நடைபெறும் இடத்துக்கு நேற்று திரண்டுவந்தனர். முல்லைத்தீவு மாவட்ட மீனவ அமைப்புகள், தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம் , வடமராட்சி கிழக்கு மீனவ அமைப்புகள் போன்றவற்றின் உறுப்பினர்களும் போராட்டக் களத்துக்கு வந்து தமது ஆதரவை வெளிப்படுத்தினர். அத்தோடு நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன், வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் து.ரவிகரன் ஆகியோரும் நேரடியாக அங்கு வருகைதந்து போராட்டத்துக்கு வலுச்சேர்த்தனர்.

**பலாலி வடக்கிலும் போராட்டம்**

பலாலி வடக்கு, அன்ரனிபுரம் மீனவர்களும் போராட்டத்தில் குதித்துள்ளனர். பொன்னாலை பருத்தித்துறை கரையோர வீதியை மறித்து , இந்தப்பகுதி மீனவர்கள் போராடி வருகின்றனர். வீதியில் கூடாரம் அமைத்து இரவிரவாக இந்தப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்திய மீனவர்களின் அத்துமீறலால் பலாலி வடக்கு, அன்ரனிபுரம் மீனவர்களும் தொடர்ச்சியாகப் பாதிக்கப்பட்டு, வாழ்வாதாரத்தை இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே அத்துமீறிய மீன்பிடியைத் தடுக்கக் கோரி அவர்கள் போராடி வருகின்றனர். பலாலி வடக்கு அன்ரனிபுரம் பங்குத் தந்தை தேவராஜன் இந்தப் போராட்டத்துக்கு வலுச்சேர்க்கும் வகையில் கலந்து கொண்டார். இன்றும் அன்ரனிபுரம் மீனவர்களின் போராட்டம் தொடரவுள்ளது.

**மாதகலில் இன்று போராட்டம்**

அத்துமீறிய மீன்பிடியைத் தடுக்கக் கோரி, மாதகல் கடற்றொழில் கூட்டுறவுச் சங்கத்தைச் சேர்ந்த அனைத்து அங்கத்தவர்களும் இன்று காலை 7.00 மணியளவில் மாதகல் துறைமுகத்தில் கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுக்க வுள்ளனர்.

இந்தப் போராட்டத்தில் சங்கத்தின் சகல உறுப்பினர்களையும் கலந்து கொள்ளுமாறும், இன்று மாலை 6 மணிவரை மீனவர்கள் தொழிலுக்கு செல்வதை இடைநிறுத்தி ஒத்துழைப்புத் தருமாறும் மாதகல் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் அறிவித்துள்ளது.

(அ-20,26,23,27)

## ஈழத்தமிழர்...

னர். இந்த நிலையில் போருக்குப் பிற்பாடும் ஐ.நா. ஈழத்தமிழர் விடயத்தில் தொடர்ந்தும் தவறிழைத்து வருகின்றது" இவ்வாறு யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ள ஐ.நா.வுக்கான இலங்கை வதிவிடப் பிரதிநிதி ஹன்னா சிங்கரிடம், யாழ். மாநகர சபை முதல்வர் வி. மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

ஐ.நா.வின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி மற்றும் உயர் அதிகாரிகளுடன், மாநகர முதல்வர் வி. மணிவண்ணன் மற்றும் மாநகர ஆணையாளர் இ. த. ஜெயசீலன் ஆகியோர் நேற்று கலந்துரையாடினர். இதன்போதே மணிவண்ணன் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி யிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் போர்க்குற்றம் புரிந்த படை அதிகாரிகள் உயர் பதவிகளுக்கு நியமிக்கப்படுகின்றனர். அவர்கள் தமிழினத்தின் மீது மேற்கொண்ட படுகொலைகள் தொடர்பில் நீதி விசாரணைகள் எதுவும் நடைபெறவில்லை.

இனப்படுகொலை என்பது சர்வதேசக் குற்றம். அதை ஒரு நாட்டின் உள்ளக ரீதியான பிரச்சினை என்று யாரும் கை விடமுடியாது. போர் முடிவடைந்த பின்னரும் எங்களுடைய பொருளாதார வளம், கல்வி, பண்பாடு, கலாசாரம் போன்றவை அழிக்கப்படுகின்றன. தற்போதும் எங்களுடைய காணிகள் அபகரிக்கப்படுகின்றன.

எமது அரசியில் அபிலாஷைகளை நாம் பெற்றுக் கொள்வது தொடர்பில் ஐ.நா. எடுக்கின்ற நடவடிக்கைகளுக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்ளுகின்றேன். ஆனால் தமிழர்களின் விடயத்தில் ஐ.நா. எடுக்கின்ற நடவடிக்கைகள் போதாது. அரசியல் கைதிகள் சிறைகளில் பல்லாண்டு காலமாக விசாரணைகள் இன்றி தடுத்து வைக்கப்பட்டு இருக்கின்றார்கள். காணாமற் போன உறவுகள் நீதி வேண்டிப் போராடுகின்றார்கள் . அவ்வாறிருக்கையில் நீங்கள் விடுகின்ற வெறும் அறிக்கைகள் அல்லது தீர்மானங்கள் எங்களுடைய அரசியல் அபிலாஷைகளுக்கான தீர்வுகளைத் தராது. அறிக்கைகள் ஆறுதல் அளிக்காது. சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் அல்லது விசேட குற்றவியல் நீதிமன்றத்தின் மூலமாக எமக்கான பிரச்சினைகளுக்கான நிரந்தரத் தீர்வுகள் கூடிய விரைவில் எட்டப்படவேண்டும் என்பதையே எமது தமிழ் அரசியல் தலைவர்களும் மக்களும் விரும்புகின்றார்கள். எமது இனத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட இன அழிப்புகளுக்கு சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் மூலம் நியாயம் கிடைக்கவும், சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட்டு எமக்கான அரசியல் தீர்வைப் பெறவும், திட்டமிட்டு அழிக்கப்படுகின்ற பொருளாதார கட்டமைப்புக்களைச் சீராக்கி எமது மக்களுக்கான வாழ்வியலை மேம்படுத்தவும் ஐ.நா உதவ வேண்டும் - என்றார். (அ-20,26)

## அநுரவைக்...

முயற்சி எடுக்கப்பட்டு வருகின்றது என்று ஜே.வி.பியின் பரப்புரைச் செயலாளரான விஜித ஹேரத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அநுரகுமார திஸாநாயக்கவுக்கு உயிர் அச்சுறுத்தல் உள்ளதென்பதையே முட்டை வீச்சு தாக்குதல் சம்பவமும் எடுத்துக்காட்டுகின்றது. அதனால்தான் அவர் செல்லும் இடங்கள் இலக்கு வைக்கப்படுகின்றன. குறிப்பாக அவர் பிரதிநிதித்துவப்ப டுத்தும் அரசியலை அழிப்பதற்கான தேவை எதிராளிகள் குழுவுக்கு உள்ளது. இந்த அச்சுறுத் தலை தடுப்பதற்கு எம்மால் முன்னெடுக்கக்கூடிய அனைத்து நடவடிக்கைளையும் நாம் மேற்கொள்வோம். அநுரவின் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்த வேண்டாம் என்று அரசுக்கு அழுத்தம் கொடுக்கின்றோம்.

இன்று முட்டை வீச்சு தாக்குதல் நடத்தியவர்கள், நாளை வேறு நடவடிக்கையிலும் இறங்கலாம். எனவேதான், அநுரவைப் பாதுகாக்குமாறு மக்கள் வலியுறுத்துகின்றனர். எம்முடன் மோதுவதாக இருந்தால் அரசியல் கொள்கை அடிப்படையில் மோதுங்கள். இப்படி முதுகில் குத்தாதீர்கள் -என்றார். (ம-4,44)

## கரிநாள்...

ளாக அடையாளப்படுத்தும்வகையில் முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் முன்னெடுக்கப்படவுள்ள போராட்டத்துக்கு பல்வேறு அமைப்புகளும் ஆதரவை வழங்கியுள்ளன.

இந்த நிலையில் கரிநாள் போராட்டத்தை எழுச்சியானதாக மாற்ற அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என போராட்ட ஏற்பாட்டுக்குழு கோரிக்கை விடுத்துள்ளது. வடக்கு- கிழக்கு சிவில் சமூகங்களும் பாதிக்கப்பட்ட தரப்பினரும் ஒன்றிணைந்து இந்த அழைப்பினை விடுத்துள்ளார்கள்.

முல்லைத்தீவு மாவட்ட ஊடக அமையத்தில் தவத்திரு வேலன் சுவாமி மற்றும் சமூகவிஞ்ஞான ஆய்வுமன்றம்,வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்கம் இணைப்பாளர்கள் நடத்திய ஊடக சந்திப்பிலேயே இவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்டது.

இதன்போது தெரிவிக்கப்பட்ட விடயங்கள் வருமாறு:

பெப்ரவரி 4 ஆம் திகதி இலங்கையின் சுதந்திர தினத்தினை முழுமையாகப் புறக்கணித்து, அது தமிழர்தேசத்தின் கரிநாள் என்ற அடிப்படையில், எதிர்ப்பை வெளிப்படுத்தி வருகின்றோம் இந்த ஆண்டுமுள்ளிவாய்க்கால் முற்றத்தில் அனைத்து தமிழ் உறவுகளும் பெப்ரவரி நான்காம் திகதி காலை 10.00 மணிக்கு , ஒன்றுகூடி தமிழர் தேசத்தின் கரிநாள் என்ற தொனிப்பொருளில் எங்கள் உணர்வுகளையும் உரிமைக்கான குரலினையும் எடுத்துக்காட்டவேண்டும். வடக்கு , கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்கத்தினர் தலைமையேற்று இந்தப்போராட்டத்தை நடத்த இருக்கின்றார்கள்.

எங்கள் தாய்மார்கள் கடந்த 12 ஆண்டுகளாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்று நீதி கோரி போராடிவருகின்றார்கள். சிவில்அமைப்புக்களாகிய நாங்கள் அனைவரும் ஒன்று திரண்டு இதற்கு ஆதரவுகொடுக்க வேண்டும்,

பாதிக்கப்பட்டதரப்புக்கள், பொதுமக்கள், மதகுருமார்கள், சிவில் சமூகங்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், மாதர் சங்கங்கள் சமூக மட்டத்தில் இருக்கும் அத்தனை பொது கட்டமைப்புகளும் இதற்கு ஆதரவு கொடுக்கவேண்டும் என்று அன்பாக வேண்டிநிற்கின்றோம். பொத்துவில் தொடக்கம் பொலிகண்டிவரைக்குமான மக்கள் பேரெழுச்சி இயக்கமும் தன்னுடைய ஆதரவினை வெளிப்படுத்தி நிக்கின்றது.

ஈழத்தமிழர்கள் அனைவரும் எழுச்சி உற்று இன்று எங்கள் எதிர்ப்பினை பதிவு செய்யவேண்டிய தேவை உள்ளவர்களாக நாங்கள் இருக்கின்றோம்.

எந்த இடத்தில் இனஅழிப்பு நடைபெற்றதோ, எந்த இடத்தில் கொத்துக்கொத்தாக மக்கள் உயிரிழந்தார்களோ, எந்த இடத்தில் எங்கள் போராட்டம் மௌனிக்கப்பட்டதோ அந்த இடத்தில் இருந்து நாங்கள் மீண்டும் எழுவோம் என்பதை இந்த போராட்டத்தில் நாங்கள் வெளிப்படுத்த விரும்புகின்றோம்.

முள்ளிவாய்க்கால் மண் எங்கள் இனத்தின் பரிகார நீதிக்கான ஆரம்ப இடமாக அமைந்துள்ளது. எங்கள் உறவுகளை நாங்கள் கையளித்தோம் அதற்கு என்ன நடந்தது? என்று இதுவரை தெரியவில்லை. நீதி கேட்டு எங்கள் தாய்மார்கள் நீண்டகாலமாக போராட்டங்களை மேற்கொண்டு வருகின்றார்கள்.

இதனைக் கருத்திற் கொண்டு முள்ளிவாய்க்கால் முற்றத்தில் தொடங்கி வட்டுவாகல் பாலம் ஊடாக முல்லைத்தீவு நகர்வரை பேரணியாகச் சென்றடையவுள்ளோம். எதிர்வரும் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அனைத்துத் தரப்பினரும் முழுமையான ஆதரவினைத் தரவேண்டும். எங்கள் தமிழ்த்தேசியம், தாயகம், சுயநிர்ணயம் என்ற கோட்பாடுகளை வைத்து இனஅழிப்புக்கு பரிகார நீதியாக , எங்கள் இனத்தினை நோக்கி ஒருதிசையில் பொதுவாக்கெடுப்பு நடத்தவேண்டும் என்ற நோக்கில் இந்த எழுச்சியினை வெளிக் கொணர்வோம். இதற்காக அனைவரும் ஒத்துழைப்பு நல்கவேண்டும்- என்று தெரிவிக்கப் பட்டது. (அ-19,110)

## சகல...

சாலைகளுக்கு பெப்ரவரி 7 ஆம் திகதி தொடக்கம் எப்ரல் 7 ஆம் திகதிவரை விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாகக் கல்வியமைச்சு நேற்று அறிவித்துள்ளது.

உயர்தரப் பரீட்சை நடைபெறும் காலப்பகுதியில் ஆரம்பப்பிரிவு பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்படாதென அரசாங்கம் முன்னர் அறிவித்திருந்தது. ஆயினும் அந்த அறிவிப்புக்கு பல தரப்புகளில் இருந்தும் எதிர்ப்புக் கிளம்பியது. குறிப்பாக இலங்கை ஆசிரியர் சங்கம் , இந்த முடிவைத் திரும்பப் பெற்று சகல பாடசாலைகளுக்கும் விடுமுறை வழங்கப்படவேண்டும் எனக் கோரிக்கை விடுத்திருந்தது. இந்த நிலையிலேயே நாட்டில் உள்ள அரச மற்றும் அரச அனுமதி பெற்ற பாடசாலைகள் அனைத்துக்கும் பெப்ரவரி 7 ஆம் திகதி தொடக்கம் எப்ரல் 7 ஆம் திகதிவரை விடுமுறை வழங்கப்படுவதாகவும், இந்தக் காலப்பகுதியில் எந்தவொரு வகுப்பும் குறித்த பாடசாலைகளில் இடம்பெறாதெனவும் கல்வியமைச்சு நேற்று அறிவித்துள்ளது. (அ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமலை சண்முகா இந்து மகளிர் கல்லூரியில்

# ‘அபாயா அணியவேண்டாம்’ மாணவிகள் நேற்றுப் போராட்டம்

**திருகோணமலை, பெப். 3**

**அபாயா அணிந்து வரவேண்டாம் என வலியுறுத்தி, திருகோணமலை சண்முகா இந்து மகளிர் கல்லூரிக்கு முன் மாணவிகள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.**



இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது: 2019ஆம் ஆண்டு குறித்த பாடசாலையில் அபாயா விவகாரம் பெரும் பிரச்சினையாக உருவெடுத்த நிலையில், அந்தப் பாடசாலையில் ஏற்கனவே கடமையாற்றி வந்த ஆசிரியை மீண்டும் பாடசாலைக்கு நேற்றுச் சென்றுள்ளார்.

அவர் அதிபர் காரியாலயத்தில் கடமையைப் பொறுப்பேற்கச் சென்ற நிலையில், பாடசாலை நிர்வாகத்துக்கும் குறிப்பிட்ட பெண் ஆசிரியருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.

பாடசாலையின் அதிபர் தன்னை தாக்கினார் என்று அபாயா அணிந்துவந்த ஆசிரியையும், அபாயா அணிந்து வந்திருந்த ஆசிரியை தாக்கினார் என்று அதிபரும், திருகோணமலை பொது மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர். இதையடுத்தே பாடசாலை வளாகத்துக்குள் அபாயா அணிந்து வரவேண்டாம் என்று மாணவிகளால் நேற்றுப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (ம)

---

*கர்ப்பிணி....*

டங்களுக்கு முன்னர், கர்ப்பிணிப் பெண்ணொருவரை பட்டப்பகலில் படுகொலை செய்த சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர் கைது செய்யப்பட்டு, நீதிமன்றில் நேற்று முற்படுத்தப்பட்டுள்ளார்.

ஊர்காவற்றுறை, கரம்பொன் பகுதியைச் சேர்ந்த ஞானசேகரன் மேரி ரம்சியா ( வயது-27) என்ற கர்ப்பிணிப் பெண்ணை, 2017 ஆம் ஆண்டு, ஜனவரி 24 ஆம் திகதி இனந்தெரியாத சிலர் கோடரியால் தலையில் தாக்கி, படுகொலை செய்ததோடு, வீட்டில் இருந்த நகைகளையும் கொள்ளையடித்துச் சென்றிருந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் இருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டதன் பின்னர் இப் படுகொலை சம்பந்தமான விசாரணைகளை கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினர் தீவிரமாக முன்னெடுத்தனர். இதன்போது கொலையுண்ட கர்ப்பிணிப் பெண்ணின் கணவரின் தொலைபேசிக்கு, சம்பவ தினத்தன்று வந்த சில அநாமதேய அழைப்புகளும் ஆராயப்பட்டன. அன்றையதினம் பணியில் இருந்த அவருக்கு தொலைபேசி அழைப்பை மேற்கொண்டு, அவர் வீட்டில் இல்லை என்பதை உறுதிப்படுத்திய பின்னரே கொலையாளிகள் கர்ப்பிணியைக் கொலை செய்துள்ளனர் என்பது விசாரணைகளில் தெரியவந்தது. இதனையடுத்து, குறித்த தொலைபேசி இலக்கத்தை மையமாகக் கொண்டு முன்னெடுக்கப்பட்ட தொடர் புலனாய்வின் அடிப்படையில் கர்ப்பிணியின் கொலையோடு தொடர்புடைய பிரதான சந்தேகநபர் நெடுந்தீவில் வைத்து , கொழும்பு குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார். இவரை ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் நேற்று முற்படுத்தியபோது, அவரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு, நீதிவான் ஜெ.கஜநிதிபாலன் உத்தரவு பிறப்பித்தார்.

இதேவேளை, இந்தக் கொலைவழக்கின் இன்னொரு சந்தேகநபர் , பிறிதொரு வழக்கில் நீதிமன்ற உத்தரவுக்கமைய சிறைவாசம் அனுபவித்து வருகின்றார். அவரிடமும் குற்றப்புலனாய்வுப்பிரிவினர் வாக்குமூலம் பெறுவதற்கான அனுமதியை ஊர்காவற்றுறை நீதிவான் நேற்று வழங்கினார்.

(அ- 23, 20)

*நாணய நிதியத்திடம்...*

நிபுணர் குழுவொன்று இலங்கை வரவுள்ளது - என்று தெரிவித்தார் நிதியமைச்சர் பஸில் ராஜபக்ச.இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:- சர்வதேச நாணய நிதியம் என்பது பொருளாதார நெருக்கடியில் இருக்கும் நாடுகளை மீட்பதற்கு ஆலோசனை வழங்கும் ஒரு நிறுவனமாகும். அதற்கேற்ப நாமும் அவர்களிடம் ஆலோசனை கோரி கடிதம் அனுப்பியிருக்கின்றோம். அவர்களும் தமது தொழில்நுட்ப ஆதரவை வழங்க நிபுணர் குழுவொன்றை இலங்கைக்கு அனுப்பவுள்ளனர். அவர்கள் கூறும் எல்லா அறிவுரைகளையும் நாங்கள் கேட்க வேண்டுமென்ற கட்டாயமில்லை. ஒரு வங்கியில் கடன் வாங்க முன்னர் அந்த வங்கியின் அறிவுரைகளைக் கேட்டு அதை ஏற்பதா? இல்லையா? என்பதை நாம்தான் முடிவெடுப்போம். அதுபோலதான் சர்வதேச நாணய நிதியத்தின் அறிவுரைகளையும் ஏற்பதா? இல்லையா? என்பதை நாமே முடிவெடுக்கவேண்டும்- என்றார். (ம)

*மன்னாரில்...*

மாவட்டத்துக்கு நேற்று திடீரென விஜயம் செய்தார். இதன்போது, மன்னார், நடுக்குடா பகுதியில் அமைக்கப்பட்டுள்ள இலங்கை மின்சார சபைக்குச் சொந்தமான மன்னார் 'தம்பபவனி' காற்றாலை மின் நிலையத்தையும் அவர் பார்வையிட்டார். குறித்த காற்றாலை மின் உற்பத்தி நிலையத்தின் மூலம் பெறப்படும் மெகாவாட்ஸ் மின்சாரத்தை தேசிய மின்கட்டமைப்பில் சேர்க்கும் திட்டங்களையும் ஜனாதிபதி கேட்டறிந்தார்.

இதன்போது, மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சர் காமினி லொகுகே, இராஜாங்க அமைச்சர் துமிந்த திஸாநாயக்க, ஜனாதிபதியின் பிரதம ஆலோசகர் லலித் வீரதுங்க, மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளர் வசந்த பெரேரா, கே.எச்.டி.கே. சமரகோன், மின்சார சபையின் பிரதித் தலைவர் நலிந்த இலங்ககோன், பதில் பொது முகாமையாளர் ரொஹந்த அபேசேகர மற்றும் அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(அ-56)


**றோயல் அக்கடமி**
**ROYAL ACADEMY**
நாவலர் றோட், நல்லூர். | அரசடி றோட், யாழ்ப்பாணம்.
**தரம் 6 முதல் O/L வரை**
கல்வியாண்டு – 2022
தமிழ், ஆங்கில மொழி மூல வகுப்புக்கள்
ஆரம்பம் - 05.02.2022, சனிக்கிழமை
☞ புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றது.

**பெண் வேலையாள் தேவை**
யாழ். கே.கே.எஸ் வீதியில் கடை ஒன்றிற்கு பெண் வேலையாள் தேவை.
**077 5217 750**

**பெண் வேலையாள்கள் தேவை**
மல்லாகத்தில் இயங்கும் எமது தொழிற்சாலைக்கு
**பொதி செய்வதற்கு**
பெண் வேலையாள்கள் தேவை.
வயது எல்லை : 18 - 35 வரை
வேலை நேரம் : காலை 7.30 மணி 5.00 மணிவரை
மாத வேதனமாக : 17000 /= தொடக்கம் 30000 /= வரை வழங்கப்படும்
(cs 18339)(2.6)
**074 049 0003**

**நிரு ரியூசன் சென்றர் கோண்டாவில்**
**கல்வியாண்டு-2022**
தரம்: 6 அனுமதிகள் வழங்கப்படுகின்றது
ஆரம்பம்: 04.02.2022
வெள்ளி காலை: 8.00 மணி
குறிப்பு:
• முதல் அனுமதிபெறும் 10 மாணவர்களுக்கும் 5000 ரூபா கல்வி சேமிப்பு திட்டம் வழங்கப்படும்.
• கற்றல் உபகரணம் வழங்கப்படும். (cs.42622) (2.6)


**மொறாயஸ்**
**பல் மூக்குக் கண்ணாடியகம்**
1962ம் ஆண்டு யாழ். வெலிங்டன் திரையரங்கு முன்பாக சிறந்த முறையில் இயங்கிவந்த மொறாயஸ் பல் மூக்குக்கண்ணாடியகம் தற்போது இல.516 யாழ். போதனா வைத்தியசாலை OPD முன்பாக இயங்கி வருகின்றது. வாசிப்பதற்கு மட்டுமான கண்ணாடி (Reading only) 500 ரூபா மட்டும். கண் பரிசோதனை இலவசமாக செய்து 3500.00 க்கு கண்ணாடி பெற்றுக்கொள்ளலாம் (இருபார்வை). பாடசாலை மாணவர்களுக்கு விசேட சலுகை உண்டு.
தொடர்புகளுக்கு:- **021 222 7893**

**சாரதிகள் தேவை**
யாழ். தாவடியில் இயங்கிவரும் நிறுவனம் ஒன்றிற்கு அனுபவம் வாய்ந்த கனரக வாகன சாரதிகள் தேவை.
(கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்)
(CS 18344)1-6
**077 2622 988**

**காணி விற்பனைக்கு உண்டு**
யாழ்ப்பாணம், நுணாவில் வைரவர் கோயில் சந்தியில் மட்டுவில் செல்லும் பிரதான வீதி முகப்புடன் 18 பரப்புக்காணி (நிலப்பரப்பு) இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு.
A9 வீதியிலிருந்து 150m தூரம்
**077 2880 152, 077 911 6983**

**பெண் வேலையாள்கள் தேவை**
யாழ். நல்லூர் பகுதியில் அமைந்துள்ள **சுப்பர் மார்க்கட்** ஒன்றிற்கு உடனடியாக பெண் வேலையாள்கள் தேவை.
(அனுபவம் வாய்ந்தவர்கள் விரும்பத்தக்கது)
சம்பளம், வேலை நேரம் பேசித்தீர்மானிக்கப்படும்.
ஷாய்றா சுப்பர் மார்க்கட்
355, அரசடி வீதி, நல்லூர்.
cs.18341) (2.7)
**077 963 7483**

**TECHNO WORLD**
**தொழில்நுட்பக் கல்லூரி**
A/L தொழில்நுட்பப் பிரிவு
**A/L 2023** புதிய பிரிவு ஆரம்பம்
**A/L 2022** மீட்டல் வகுப்புக்கள், PAPER Class
ஆரம்பம் - 05.02.2022
நேரம் - காலை 7.30
இடம்: வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம்.
**077 0175 346**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 03.02.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.